# காஞ்சி



காஞ்சி

மலர் 1 7—2—645 இதழ் 26

# உன்னோடு பிறந்ததனால்!

தமிழ் மகனே! தமிழ் மகனே! தலை நிமிர்ந்து வாழ்ந்து வந்த இனத்திலுதித்த தமிழ் மகனே! தரணி மெச்ச வாழ்ந்த மரபினில் வந்த தமிழ் மகனே! ஏனடா கொற்றவனே! இந்நாளில் இந்த மண்ணிலே வந்து பிறந்தாய்! பனிப்பாறைகளே உள்ள இடந்தனிலோ, பாலை வனப் பகுதியே மிகுதியும் உள்ள நாடதிலோ, வரலாற்றுச் சிறப்பற்ற ஓரிடத்திலோ; எங்கோ ஓரிடத்திலே பிறந்திருக்கக்கூடாதா! இங்கு வந்து பிறந்தனையே, இழிநிலையைத் தாங்கித் தவித்திட, இன்னலை ஏற்றுத் துடித்திட, இருப்பனவற்றிலெல்லாம் இனித்திடுவதாம் தன் மானம் தன்னைப்பறித்திடும் செயலிலே ஈடுபட்டுவிட்ட வன்கணாளரின் வஞ்சகத்தால் வதைபட! ஏன் இங்கு பிறந்தாய்!!

இன்பத் தமிழ் நாட்டிலே பிறந்ததனாலன்றோ உனக்கு, மொழி உணர்வும், உரிமை வேட்கையும், தன்மான ஆர்வமும், துளிர்த்து வளர்ந்து வண்ணமும் மணமும் நிறைந்திடும் எண்ணத்தினைத் தந்துவிட்டது. இணையற்ற நிலையில், இசைபட வாழ்ந்திருந்த தமிழ் இனத்திலே பிறந்ததனாலன்றோ உனக்கு உணர்ச்சி பொங்கி வழிகிறது; தடை உடைபட. பகை பொடிபட, பரணி பாடிக் களம் சென்று வெற்றி கண்டார் முன்னோர் என்பது பற்றிய காப்பியம் பயின்றாய்; ஒப்பற்றது என்று அறிவாளர் ஒப்புக்கொள்ளத்தகு திறம் நிறைந்த மொழி பயின்றாய்; அம்மொழியில் ஆன்றோர் வடித்தளித்த இலக்கியம் கற்றாய்; அந்த இலக்கியம் அளித்திடும் ஏற்றமிகு நற்கருத்துகளைப் பெற்றாய்; பெற்றதனால், உன் நடையிலே ஓர் முடுக்கு, உன் பார்வையிலே ஓர் ஒளி, உன் பேச்சிலே ஓர் எழுச்சி பிறந்தது; அதன் காரணமாகவன்றோ, நான் எதனையும் இழப்பேன், என் உரிமையை மட்டும் இழந்திடமாட்டேன்; நான் எவரையும் வரவேற்பேன், ஆதரிப்பேன், நட்பு கொள்வேன்; யாதும் ஊரே யாவரும் கேளிர் எனும் நெறி நிற்பேன்; ஆனால் எவருக்கும் ஆட்படேன், அடிமை ஆகேன் என்று முழக்கமிட முடிகிறது! இந்த நிலை நீ பெற்றுள்ளதனாலன்றோ, உன்னை அடக்கிட ஒடுக்கிட, அழித்திட ஒழித்திட, ஆர்ப்பரித்தும் பாய்ந்திடவும், அடித்து நொறுக்கிடவும், பழி சுமத்திடவும் குழி பறித்திடவும், வழி மறைத்திடவும் விழி பெயர்த்திடவும், கரம் ஒடித்திடவும் குருதி வடித்திடவும், வெட்டவும் குத்தவும் வேல்கொண்டு தாக்கவும், வெறிகொண்டோர் கூட்டம் முனைந்துவிட்டது. இவை உடலை வாட்டிடுவன; அம்மம்மா! உன் உணர்வை வாட்டி வதைத்திடும் விதமான சொல்லம்பு விடுவோரும், இழிமொழி பேசுவோரும், இட்டுக் கட்டுவோரும் இருப்பதை மறைப்போரும், உன்னைச் சூழ்ந்துகொண்டு விட்டுள்ளனரே! அகன்ற வாய் ஓநாய்களுக்கு மத்தியிலே சிக்கிக்கொண்ட புள்ளி மான்போல, நீ இருக்கின்றாயே! தமிழ் மகனே! தமிழ் மகனே! இவ்வளவும், நான் தமிழ் மகன், என் மொழி தமிழ், அம்மொழி தாழ்ந்திட விடமாட்டேன் என்ற ஓர் ஆர்வம் கொண்டு விட்டனையே, அதனால் வந்ததன்றோ. இந்த ஆர்வம் தமிழ் மகனே! உன்னை என்னென்ன பாடுபடுத்துகிறது, எத்தனை எத்தனை எதிர்ப்பு வளையங்களிலே உன்னைத் தள்ளிவிட்டு, தத்தளிக்கச் செய்கிறது, ஏதுமறியாதாரும் எதையும் இழந்து வாழ வழி பெற்றிடும் இயல்பினரும், அடுத்துக் கெடுப்போரும் ஆகா வழி காட்டுவோரும், அவரவரின் கருவிகளைத் தீட்டிக் கூராக்கி, உன் உடலிலும் உள்ளந்தனிலும் பாய்ச்சுகின்றனரே! உன் அகன்ற மார்பிலே அவை பாய்கின்றன, தைக்கின்றன; குருதி கசிந்திடுகிறதே; குவலயம் மெச்ச வாழ்ந்தவர்—தம் வழி வழி வந்திட்டவனே! வீரம் இழந்திட மறுக்கின்றாய், வீணர் உன்னை வெட்டி வீழ்த்தியேனும், வீரத்தைப் பழித்திட முயலுகின்றனர். மலைப்பாம்பு உடலைச் சுற்றிக்கொண்டு இறுக்கி இறுக்கி உயிரைப் போக்கிட முனைவது போலன்றோ, உன் உணர்ச்சியை உருக்குலைத்திட, அரசுபெற்றுள்ள அத்துணை கருவிகளும் உன்னை நோக்கி ஏவப்படுகின்றன! என் செய்வாய் என் அரசே!! வீழ்ந்துபடமறுக்கும் தமிழரின் போர் முரசே!! ஏன் இந்த நிலை உனக்கு!! என் மொழி என்று முழக்கம் எழுப்புகிறாய்! என் மொழி தொன்மையும் மென்மையும் கொண்ட இனிமைத் தமிழ் மொழி, ஏங்கித் தவித்து; இளைத்துக் களைத்து, ஒருபுறம் நிற்க, இந்தி மொழிக்கா அரியணை என்று கேட்கின்றாய். புருவத்தை நெறிக்கின்றனர், பொறி பறக்கப் பேசுகின்றனர், நாராசச் சொற்களை வீசுகின்றனர்! கூடிப் பேச முனைகின்றாய், காலிக் கும்பல் என்று ஏசுகின்றனர். உறுதியாகக் கூறுகின்றாய், வெறிப்பேச்சு என்று ஏளனம் செய்கின்றனர். அணி வகுத்துச் செல்கின்றாய், அடித்து விரட்டுகின்றனர், நள்ளிரவில் வீடு புகுந்து. இழுத்துச் செல்கின்றனர் சிறைச்சாலைக்கு. தடியடி! கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு! துப்பாக்கிச் சூடு! எல்லாம் உனக்கு! எல்லாம், உன் உள்ளத்திலே இருந்து, அந்த உணர்ச்சியைக் கல்லி எறிந்திட, கருக்கிப் போட்டிட! அதனை அறிந்துதான் கேட்கின்றேன், கண்ணீர் உகுத்தபடி, கொற்றவனே! ஏனடா இந்தத் தமிழ் நாட்டிலே வந்து பிறந்தாய் என்று. கரம் ஒடித்தனர். சிரம் பிளந்தனர், காலில் அடித்தனர், கண்களைக் குத்தினர் என்றெல்லாம் செய்திகள்! அடிபட்டவர்க்ளின் படங்கள்! அவர்களை அல்லலுக்கு ஆளாக்கிட வந்தவர்களின் காட்டு முறைபற்றிய

விவரங்கள்! இவைபற்றிப் படித்திட்டபோது, என் உள்ளம் மட்டுமல்ல, எது நடந்திடினும் எமக்கென்ன என்று இருந்து வரும் இயல்பினரின் உள்ளமும், அனலிடை மெழுகாயிற்று; கைபிசைந்து கொண்டோம், கண்களைக் கசக்கிக்கொண்டோம்; என் செய்வோம்! சாரைசாரையாக சென்றனர்; கொண்டு செல்லப்பட்டனர்; இழுத்துச் செல்லப்பட்டனர், மொழி உணர்வு கொண்டிடத் துணிந்து நின்றவர்களே! தமிழகமெங்கணும். இருபத்தி ஐந்தாம்நாள் நள்ளிரவில் தொடங்கிய இந்த வேட்டை தொடர்ந்தது, தொடர்ந்தது, மூன்று நான்கு நாட்கள். எங்கெங்கு உள்ளோரும் சிறையில் தள்ளப்பட்டனர்!

நாவலர்? சிறையில்!

மதி? சிறையில்!

கருணாநிதி? சிறையில்!

அன்பழகன்? சிறையில்!

செழியன்? சிறைதான்!

நலிந்து உடல் மெலிந்து உள்ள சி. பி. சிற்றரசு! சிறையில்!

மனோகரன்? சிறைதான்!

அடுக்கடுக்காகக் கேள்விகள் கேட்பானேன், மொழிப்பற்று, உரிமைவேட்கை கொண்டு, இந்தி ஆதிக்கத்தை எதிர்த்திடத் துணிந்தவர் அனைவரும் மாணவமணிகள் உட்பட சிறையில்தான்!! — இந்த நிலையால் நொந்தனர் பல்லாயிரவர் எனில், வெளியிலே இருந்தவர்கள் பட்ட வேதனையின் அளவும் வகையும் சொல்லுந்தரத்ததன்று.

ஜனவரி 26ல், இந்தி ஆட்சிமொழி ஆக்கப்படுகிறது; குடிஅரசு நாளாகப் பார்த்து நம் குடிகெடுக்கும் இந்தியை அரசோச்ச வைக்கிறார்கள் என்று உணர்ந்து உள்ளம் வெதும்பி, உயிரைச் சுமந்துகொண்டு, உலுத்தனே! இருந்தனையே! ஒரு வார்த்தை எதிர்த்துப் பேசினாயா? ஒரு சிறு கண்டனம் தெரிவித்தனையா? உன் உள்ளக்குமுறலை ஊர்அறிய உலகறிய, உன் துயரத்தை எடுத்துக்காட்டினாயா? என்று உலகின் அறிவாளர் கேட்பார்களே, இன்று மட்டுமல்ல, எதிர்காலம் கேட்குமே என்று நினைத்து, நமது கண்டனத்தை, துக்கத்தைத் தெரிவிக்க, கருப்புக் கொடி ஏற்றுவது, கருப்புச் சின்னம் தரிப்பது என்று முடிவெடுத்தோம்; அதனை முறைப்படி அறிவித்தோம்— அரசுசெய்தது என்ன? அன்புரைவழங்கிற்றா? அழைத்துப் பேச முனைந்ததா? இல்லை! இல்லை! அடித்து நொறுக்குவோம்; கிழித்துக் கொளுத்துவோம்; கலாம் விளைவித்துக் கலைத்திடுவோம்; தாக்குவோம்; துரத்துவோம்; தணலில் தள்ளுவோம் என்று வெறிப் பேச்சுப் பேசிடும் அடியாட்களை, பிடியாட்களை உலவவிட்டது! சட்டம் சமாதானம், ஒழுங்கு அமைதி, உரிமை உடைமை உயிர் ஆகியவற்றினுக்கு ஊறு நேரிடாதபடி பாதுகாத்திடும் பொறுப்பினை மேற்கொண்டுள்ள அமைச்சர்கள், முகமெலாம் மகிழ்ச்சி பொங்கிவழிய வழிய, வன்முறைப் பேச்சாளர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டுக் கேட்டுப் பூரித்துப் போயிருந்தனர். பத்து நாட்களுக்குமேல் நடைபெற்ற இந்த நாப்பறை, அமைச்சர்களுக்கு இசையாக இருந்தது. கொக்கரித்தனர், கோல் சுழற்றினர், பறந்தால் கொடி மற்ற நேரத்தில் தடி என்று பாடினர். துக்கம் காட்டுவோரை என்ன நாம் செய்தாலும், ஈ எறும்பும் நம்மீது மொய்க்காது, இதற்கான உத்திரவாதம் பெற்றுவிட்டோம், போலீசும் குறுக்கிடாது, எனவே இந்நாள் நமதே!! என்று கூவினர், குதித்தனர்; கொதித்தனர் கதைத்தனர்! இந்தச் சூழ்நிலையின் துணைகொண்டு வளைந்து கிடப்பவைகள் நிமிர்ந்து நின்றன, வாடிக்கிடந்தவைகள் பாடிக்கிளம்பின, வீரம் கொப்பளித்தது போலீஸ் நம்மை பிடிக்காது என்று உறுதி தரப்பட்டதாம்! அவ்வளவு போதாதா! தெருவெல்லாம் தனி முழக்கம்!! கரத்திலே கத்தி, கட்டாரி; தீவட்டிகூட! பிடி! அடி! உதை! ஏறு! இழு! அறு! கொடு! கொளுத்து! — இவை படையினரின் நடவடிக்கைக் குறிப்பொலிகள். குடிஅரசு நாள் அன்று! அன்று நடைபெற்ற வன்முறைபோல, காட்டரசிலும் பார்த்திருக்க முடியாது. தாங்கிக்கொண்டனர்! தாக்கப்பட்டனர், தழும்பு பெற்றனர், தாயகமே! தாய்மொழியே! உனக்கா இவை! உனக்காக இவைகளைமட்டுமா, வேறு கொடுமைகளையும் ஏற்றுக்கொள்வேன்! உன் அருமையினை அறியாதவர்கள், ஏவிவிடப்பட்டவர்கள், ஏதேதோ செய்கின்றனர்; செய்துவிட்டுப் போகட்டும்; அவர்கள் அறியார்கள் அவர்கள் செய்திடுவதிலே உள்ள தீமைகளை, அநீதிகளை! அவர்களே ஓர்நாள் உணருவார்கள், உள்ளம் சுடும், உண்மை துலங்கும், இன்றையப் பகைவர்கள் நாளைய நண்பர்கள் என்று எண்ணி, பொறுத்துக்கொண்டனர். பலர் பொறுத்துக்கொண்டனர், ஆனால் சென்னையில் இரு இளைஞர்கள், வெளியில் ஒருவர்; ஆக மூவர், இழிநிலையைச் சுமந்துகொண்டு இனியும் நாங்கள் இருந்திடப் போவதில்லை; இந்தி ஆதிக்கம் புகுத்தப்பட்டு விட்ட இந்த மண்ணில் இனி நாங்கள் உலவிடப் போவதில்லை என்று கூறி, தம்மைத் தாமே மாய்த்துக்கொண்டுவிட்டனர். ஆமாம், அநியாயமான சாவு! கேட்போர் நெஞ்சு பிளந்திடும் விதமான தீக்குளிப்பு. இங்குள்ளோர் மட்டும் அல்ல, தொலைவினில் உள்ள லால்பகதூரும், நெடுந்தொலைவினில் உள்ள அமெரிக்க நாட்டினரும் பிறரும்கூட, கேட்டு துயருற்றனர், மனம் குமுறினர். நமது அமைச்சர்கள்? அவர்களா! அவர்கள், என்ன, சாமான்யர்களா, அழுதிட! ஆராய்கின்றனர்!! ஏன்? எப்படி? என்று !! இரக்கம் எழுமே, எவருக்கும் என்பீர்கள்! ஆம்! இரக்கம் எவருக்கும் எழும்—இதயம் இருப்பதால்! நமது அமைச்சர்கள், நல்ல விலைக்குத் தமது இதயத்தை விற்று விட்டவர்களாயிற்றே! ஏன் அழப் போகிறார்கள்! அழவில்லை மாறாக, பரிகாசம் பேசினர்!! தமிழ்காத்திட இந்தி ஆதிக்கத்தை ஒழித்திட, இன்னுயிரைத் தந்தனர்-அது கேலிக்குரியதாகிறது கனம்களுக்கு!! மக்கள் மனம்!

குமுறினர், உள்ளம் நைந்து உருகினர்; ஆயிரக் கணக்கினர் பார்த்தனர், பதறினர், தாய்மார்கள் கண்டனர், கண்கள் குளமாயின! அமைச்சர்களோ, இரக்கம், உருக்கம், எனும் உணர்ச்சிகளை விரட்டி அடித்துவிட்டு, நிமிர்ந்து நின்றனர்! நாடு, தீக்குளித்தோர்களைக் கண்டு விம்மிற்று; இரக்கம் எழா மனத்தினராக நின்றிருந்த அமைச்சர்களைக் கண்டு வெட்கப்பட்டிருப்பர்! இவர்கள் அமைச்சர்களானதற்கு நாமல்லவா வழிசெய்து கொடுத்தோம் என்பதனை எண்ணி. இவர்களுக்கு, நாட்டை வளப்படுத்தும் நல்லறிவும், மக்களை வாழவைக்கும் நுண்ணறிவும், தொழில் பெருகிடும் புத்தறிவும், போதுமான அளவு இருக்கிறதோ இல்லையோ, அதுபற்றிக்கூட அதிகம் பொருட்படுத்தத் தேவையில்லை; இரக்க உணர்ச்சியும் எழக்காணோமே!! என்ன விந்தை! எத்தனை விபரீதம்! இப்படிச் சில பிறவிகளா! என்று எண்ணித் துயருற்றிருப்பர்; மறுகணமோ, இத்தகையவர்களை ஆளவந்தார்களாக்கினோமே! நாம்தானே அந்தத் தவறு செய்தோம்!! என்றெண்ணி வெட்கப்பட்டிருப்பர், வேதனையும் வெட்கமும் விலாவினைக் குத்திடும் நிலையினராகியிருப்பர்.

கழகத்தவர்கள்மீது, அவர்கள் நாங்கள் குடிஅரசு விழாவினைக் கெடுத்திடும் நோக்குடன் அல்ல, இந்தி ஆதிக்கத்தை எதிர்த்திடும் நோக்குடனேயே துக்கம் மேற்கொள்ளுகின்றோம் என்று பன்னிப்பன்னிக் கூறிய பிறகும், பல்வேறு முறைகளில் விளக்கம் அளித்த பிறகும், மாநில முதலமைச்சர், சீறினார், கடுமொழி வீசினார், காட்டாட்சி நடத்தத் துணிவு கொண்டுவிட்டதைக் காட்டிக்கொண்டார்.

> கருப்புக் கொடிகளைப் பறக்கவிடமாட்டோம்,
>
> கண்டனக் கூட்டங்கள் நடத்தவிடமாட்டோம்

என்று 'பிரகடனம்' செய்தார்; பொதுக் கூட்டங்களில், சட்டமன்றங்களில்.

> கருப்புக் கொடி
> கண்டனக் கூட்டம்

இவைகளுக்குத் தடை விதிக்கப் போகிறீரா என்று சட்டமன்ற எதிர்க்கட்சி துணைத்தலைவர் என்ற நிலையில் கருணாநிதி கேட்டிருக்கிறார்.

> தடைபோடப்போவதில்லை. என்ன நடக்கப்போகிறது என்பது அன்று தெரியும்

என்று முதலமைச்சர் முடுக்குடன் பேசியதுடன்,

> கண்டனக் கூட்டம் நடத்துவோருக்குப் போலீஸ் பாதுகாப்பு தரப்போவதில்லை

என்ற, உயரிய, பண்புமிக்க, நெறியினையும் அறிவித்தார்! பொருள் என்ன இருக்கமுடியும் இதற்கு? தாக்குதல்! கலாம் விளைவித்தல்! எதையும் செய்யலாம். போலீஸ் குறுக்கிடாது என்று தூபமிடுதல்!

முதலமைச்சர் மேற்கொண்ட முறை, அறவழி அரசியல்தானா என்று கேட்டேன்; உரிய நேரத்தில் உரிய இடத்தில், நான் எழுப்பிய பலவற்றினுக்குப் பதில் அளிக்கப்போகிறாராம்! அறிகிறேன்!!

இத்தனை இன்னலுக்கும் எரிச்சலுக்கும் இடையில் கழகத் தோழர்கள், தமது கடமையினை மேற்கொண்டனர்; தமது முயற்சிகள் குலைக்கப்பட்டபோது, தமது இல்லங்களில் பறக்கவிடப்பட்ட கருப்புக் கொடிகள் பறிக்கப்பட்டபோது, இயற்கையாக எழக்கூடிய கொதிப்பையும் கோப உணர்ச்சியையும் கட்டுக்கு அடக்கிவைத்துக்கொண்டனர். இதனால் சிலருக்கு, ஆரவாரம் செய்திடவும் வன்முறையில் ஈடுபடவும் தெம்பு பிறந்தது; மகிழ்ச்சியும் கொண்டிருந்திருப்பர்; நமது கழகத் தோழர்கள் மனம் குமுறிப்போயிருந்திருப்பர். அது அந்த நேரத்து உணர்ச்சி; அற்பமானதோர் மகிழ்ச்சி பெற்றிருப்பர்! ஆனால் தாங்கும் சக்தியும் மனதைத் தளரவிடாத தன்மையும் எரிச்சலூட்டும் எதிர்ப்புக்கிடையில், பதில் நடவடிக்கையில் நுழையாமல், பொறுப்பையும் பொறுமையையும் இழந்திடாமல் இருந்திடும் 'உள்ள உரமும் பெற்றவர்' என்ற நிலையான புகழ்பெற்றுள்ளனர் கழகத்தவர். நெருப்பிலிட்டுப் பழுக்கக் காய்ச்சி, சம்மட்டிகொண்டு அடித்து அடித்துப் பிறகுதான் இரும்பு பல்வேறு கருவிகளாக வடித்தெடுக்கப்படுகிறது; அத்தனைக்கும் உட்பட்டபிறகுதான், இரும்பு இரும்பாக மட்டும் இருந்தபோது பெற்றிருந்த பயன்தரு வலிவினைவிட மிகுதியான அளவு வலிவினைப் பெறுகிறது. கழகம் தாங்கிக்கொள்ளும் சக்தியை வளர்த்துக்கொள்வது, கேவலமும் அல்ல, வருத்தப்படவேண்டியதுமல்ல, எதிர்காலத்துக்காக இவைகளைத் தாங்கிக்கொள்ளும் நல்லியல்பாகும்; அதன் காரணமாக, கழகத்தின் பயன் மிகுதியாகிறது.

இழிமொழி பேசிப்பேசி எரிச்சலூட்டி, நம்மை நமது நல்வழியினின்றும் பிறழச் செய்திடவேண்டும் என்று மாற்றார் இன்றுவரை மேற்கொண்ட முயற்சியில் அவர்கள் வெற்றிபெற்றார்களில்லை. அவர்கள் இழிமொழிகளைத் தாங்கிக்கொள்ளத் தாங்கிக்கொள்ள, நாட்டவர் முன்னிலும் அதிக அளவிலே நம்மிடம் பரிவு காட்டிட முனைந்தனர்; ஆதரவை வழங்கினர்; காண்கின்றோம்; காண்கின்றனர். கண்டும், இன்றும் நிலைநிலையான பயன்தராத, நொடிப்பொழுது மகிழ்ச்சி வெறிமட்டுமே தரத்தக்க காட்டுமுறையினை ஏன் மேற்கொள்கின்றனர் எனக் கேட்டிடத் தோன்றும், கருத்திலே தெளிவு இல்லாததால், காலக்குறியினை அறிந்திடும் திறமற்றதால், கணக்கு புரியாததால்!! இத்தகையோரின் எதிர்ப்பு. நமது வளர்ச்சியைத் தடுத்திடவில்லை, நாவலர் கூறியுள்ளபடி, 'கழகப் பயிர் செழுமையாக வளர்ந்திட அவர்தம் இழி முறைகள் எருவாகப் பயன்பட்டு வருகிறது. உர உற்பத்தியாளர்கள்கூட, அடிக்கடி மாற்றப்பட்டு வருகின்றனர், அறிகிறோம். பழய சரக்கு வாங்குவாரற்றுப்போகும் நிலை பிறந்ததும், 'சூடச்

( 13-ம் பக்கம் பார்க்க )

# இந்தி நமை அழிக்கவரும் செந்தீ!

[இந்தி ஆட்சி மொழி ஆக்கப்படுவதைக் கண்டித்து அறிவாளர் பலர், அவ்வப்போது நாளிதழ்களில் வெளியிட்டுள்ள கண்டனக் கடிதங்களில் சிலவற்றினை இங்கு தந்துள்ளோம்.]

## திணிப்புக் கொடுமை

இன்று உள்ள அளவு தேசிய மொழிப் பிரச்சினையின் கடுமை இந்திய அரசியலின் நீண்ட வரலாற்றில் என்றுமே இருந்ததில்லை. பல்வேறு மொழிகளையும் மக்களையுங்கொண்ட இந்தத்துணைக்கண்டத்தை இந்தியர்கள் மட்டுமின்றி, வெளிநாட்டவரும் ஆண்டிருக்கிறார்கள். ஆனால் எந்த ஆட்சியிலும் இப்படிப்பட்ட மொழிப்பிரச்னை இருந்ததே இல்லை. கிரேக்கர்கள், முகலாயர்கள், பட்டாணியர்கள், ஏன் வெள்ளையர்கள்கூட ஒற்றுமையைக் கட்டிக் காப்பதற்காக யார்மீதும் ஒரு தனி மொழியைத் திணிப்பதுபற்றி எண்ணவில்லை.

இவ்வளவு காலமாக, பல்வகைப்பட்ட ஆட்சிகளின் கீழிருந்தும் இந்தியத் தேசியத்துக்கு எந்தக் குறையும் ஏற்பட்டுவிடவில்லை. இங்கே பிறக்கிறவர்கள், இங்கே வாழ்கிறவர்கள், இந்த நாட்டைத் தாயகமாகக் கொண்டுவிட்டவர்கள் அனைவரும், அவர்கள் எந்த மொழிக்காரரானாலும், எந்த நிறத்தவரானாலும் இந்தியர்தான். எனவே அப்படிப்பட்டவர்கள் பேசும் ஒவ்வொரு மொழியும் நம் தேசியமொழிதான். நம் அரசியல் சட்டம் ஏற்றுக்கொண்டிருக்கிற மொழிகள் எல்லாம் இந்த வகையில் சேர்ந்தவையே. மாநிலங்களுக்கிடையேயும், படித்தவர்களுக்குள்ளும் தொடர்பு மொழியாக ஆங்கிலமே போதும்; அது வெள்ளையரின் மொழி என்பதால் அன்று, உலகத்தின் தலைசிறந்த மொழி என்பதால். நம்முடைய தேசீய உணர்வுக்கு அதனால் எத்தகைய கேடும் வந்துவிடாது.

நாம் ஏதாவதொரு மொழியைக் கற்றுத்தான் தீர வேண்டுமென்றால், அது ஒரு பிராந்தியத்தின் மொழியாக இருப்பதைவிட உலக மொழியாகவே இருக்கட்டும்.

பி. கே! கூப்து, கல்கத்தா.

அம்ருத பசார் பத்திரிகா 31—1—65

## துரோகம் செய்கிறார்கள்.

வாழ்க்கை வகையைச் சென்னையில் தேடிக் கொண்ட ஒரு மைசூர்க்காரன் என்ற முறையில் நான் இதை எழுதுகிறேன். இந்திக்கு எதிராகச் சென்னையில் நடந்துகொண்டிருக்கும் போராட்டத்தை உங்கள் வாசகர்கள் அறிந்திருப்பார்கள் என்று எண்ணுகிறேன். அவசர அவசரமாக ஆங்கிலத்தைத் தூக்கி எறியத் துடிப்பதன் பின் விளைவுகள் நாம் அறிந்தவையே. ஆனால் அதற்கு மைசூர் மாநிலத்தில் வெளிப்படையான எதிர்ப்பு ஏன் இல்லை?

ஒவ்வொரு மைசூர்க்காரனும் தன்னுடைய தமிழ்ச் சகோதரனைவிட இல்லாவிட்டாலும் அந்த அளவாவது இந்தி எதிர்ப்பு உணர்ச்சி கொண்டிருக்கிறான். ஆனால் அவன் அதை உணர்வதோடு சரி. இதனால், விளைவுகளைப் புரிந்து கொள்ளுவதில் கன்னடியர்கள் மந்தமாக இருக்கிறார்கள் என்று சென்னைக்காரர்களும், இந்த மவுனமே சம்மதத்திற்கு அறிகுறி—ஆதரவுக்கு எடுத்துக்காட்டு என்று இந்திச் சார்புடைய டெல்லித் தலைவர்களும் தப்புக் கணக்குப் போடுகிறார்கள்.

நம்முடைய காங்கிரஸ் தலைவர்களும், எதிர்க்கட்சித் தலைவர்களும் சேர்ந்து நமக்குப் பெருந் துரோகம் இழைத்திருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது. ஊழல் குற்றச்சாட்டுக்கள், அதற்கான பதில்கள், சட்ட சன்ற வெளிநடப்புக்கள் போன்றவற்றில்தான் அவர்கள் மெத்த அக்கறை காட்டினார்கள். சாதாரண குடிமகனைப் பற்றி எப்போதோ ஒருமுறைதான் கவனிக்கிறார்கள்.

இந்தியால் தொல்லைப்படப் போகிறவர்கள் ஏற்கனவே மூத்து நரைத்த இந்த முதிய தலைவர்கள் அல்ல; வாழவேண்டி வேலை தேடும் இளைஞர் கூட்டம்தான் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

இந்தித் திணிப்புக்கு எதிராக, உரிய நேரத்தில் விழிப்பாக இருந்து தங்கள் உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்ளவில்லை என்றால் பிறகு ஆண்டவனிடம் முறையிடுவதைத் தவிர வேறு வழி இராது.

நான் தி. மு. க.-வைப் போற்றுகிறவனோ, தீக்குளிப்பைப் பாராட்டுகிறவனோ அல்லன். ஆனால்

சென்னை மக்களைப் பொறுத்தவரையில் அவர்களது கவலைகளுக்கும், அச்சத்துக்கும் உருவம் கொடுத்து வெளிப்படுத்த கட்டுக் கோப்பான ஒரு கட்சியும், அதற்காகவே தங்களைக் காணிக்கையாக்கிக் கொண்ட தலைவர்களும் இருப்பது அவர்களுக்கு ஒருநல்வாய்ப்பே. நம் மக்களும் மாநிலமும் இந்தப் பிரச்சினையில் தூங்கிக் கொண்டிருந்து விட்டுப் பின்னால் நெருக்கடியான ஆபத்தில் இருப்பதாக உணரமாட்டார்கள் என்றே நம்புகிறேன்.

"மைசூர்க்காரன்" சென்னை.
டெக்கான் ஹெரால்ட் 1—2—65

✻

## அறிவுக்கண் திறக்குமா?

இந்தித் திணிப்பு எதிர்ப்பு உணர்ச்சியைச் சென்னை மாணவர்கள் மிகத் தெளிவாக வெளிப்படுத்திவிட்டனர். மறுபுறம் இந்தி ஏகாதிபத்தியத்தைப் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து அமைதியாகத் தி. மு. க. எதிர்த்து வருகிறது. ஆனால் சென்னை மாநில முதலமைச்சரும், காங்கிரஸ் தலைவர்களும் தமிழ் மக்களின் உணர்ச்சிகளை இன்னமும் புரிந்து கொள்ளாதவர்கள்போல் பாசாங்கு செய்வது வியப்பாக உள்ளது. மாணவர்கள் காட்டும் எதிர்ப்புணர்ச்சிக்குத் தி. மு. க.வைக் குற்றம் சாட்டுவதிலிருந்தே, இந்தி பேசாத தென்னக மக்களை எதிர்நோக்கி இருக்கும் ஒரு பயங்கரமான பிரச்சினையை மறைக்கப் பார்க்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

மாநில அரசு மொழிப் பிரச்சினையை எப்படிக் கையாண்டதோ அப்படியே மாணவர்களும் தங்கள் அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் வெளிப்படுத்துவதே முறையானது. ஆனால் மாணவர் குழப்பத்தைத் தொடர்ந்து நிகழ்ந்த சில விரும்பத்தகாத நிகழ்ச்சிகளையும் மறந்துவிடுவதற்கில்லை. நான்கு உயிர்கள் பலி கொள்ளப்பட்டன; பலர் படுகாயமடைந்தார்கள். இந்திக்கு எதிராகத் திரண்டுள்ள மக்களுணர்ச்சியைப் புரிந்துகொண்டு உரிய முறையில் செயலாற்ற அரசுக்கு இதுவே தக்க தருணம். உறுதிமொழிகளும்; எச்சரிக்கைகளும் நல்ல பயனைத்தரமாட்டா. ஜனநாயகத்தில் இத்தகைய ஆர்ப்பாட்டங்களை அடக்கிவிடுவது நோய்க்குறியை நீங்குவதாகுமே அன்றி நோய் தீர்ப்பதாகாது. இனியாவது ஆட்சியாளர்களின் அறிவுக்கண் திறக்கட்டும். இந்தியாவை நாம் பிளவுபடுத்தவேண்டாம்; தென்னக மாந்தர்கள் இரண்டாந்தரக் குடிமக்கள் என்று தரந்தாழ்த்தவும்வேண்டாம். நம்முடைய இந்தக் கூக்குரலுக்கு அரசு செவிசாய்க்குமா?

சி. தேவதாசன், வேலூர்.
மெயில், 31—1—65

✻

## எதிர்காலக் குடிமகன்.

மாணவர்கள் அரசியலில் பங்குகொள்ளக்கூடாது என்பதைத் திரும்பத் திரும்பச் சொல்லுவதில் பயனில்லை. ஏன், காந்தியாரே மாணவர்களைக் கல்லூரிகளைவிட்டு வெளியே வரும்படி சொல்லவில்லையா? மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஏதாவது நியாயம் உண்டானால் அது இதனால்தான்—நாட்டின் பதினான்கு தேசிய மொழிகளுள்ளும் மிகவும் கீழான ஒரு பிராந்திய மொழியை ஆங்கிலத்துக்குப் பதிலாகத் திணிப்பதால் தான். ஏனெனில் இன்றைய, எதிர்காலக் குடிமகன் ஒவ்வொருவனும் ஆட்சி மொழியில் பெறும் திறமை தான் அவன் வாழ்வின் அடிப்படை. அவன் வாழ்வதும் தாழ்வதும் அதனால்தான்,

இப்படிச் சொல்வது வன்முறை ஆர்ப்பாட்டங்களுக்கும், வெறிச் செயல்களுக்கும், தீக்குளிப்புச் சம்பவங்களுக்கும் ஆதரவு காட்டுவது ஆகாது. பொட்டி சீராமுலுவின் தியாகம் மொழிவாரி மாநில அமைப்புக்கு வழி கோலுமானால், அதைவிடப் புனிதமான ஒன்றுக்காகத் தீக்குளித்து நீதி பெறலாம் என்ற எண்ணம் நிலவுவது உண்மை.

இந்தி பேசாத மாநிலங்களில் நிலவும் அமைதியின்மையும், சுவர்களில் எழுதுவதும் சட்ட ஒழுங்குப் பிரச்சினை மட்டுமன்று என்பதற்கு உடன்பாடான அறிகுறிகள் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் காங்கிரஸ் தலைவர் பேச்சிலும், சென்னை மாநில அமைச்சர்கள் இரண்டொருவர் பேச்சுக்களிலும் தென்படுகின்றன.

திருமதி. இந்திரா காந்தியின் பிள்ளைகள் இங்கிலாந்தில் படிக்கிறார்கள். கிட்டத்தட்ட ஒவ்வொரு தலைவரின் குழந்தைகளும் ஆங்கில வழிக் கல்வியே பயிலுகிறார்கள். விளைவாக, நிலைமை இதுதான். இந்தி மாநிலங்களின் எதிர்காலக் குடிமக்களுக்கு அவர்கள் தாய்மொழியே ஆட்சிமொழி. மேலும் உலகமொழியாம் ஆங்கிலத்தில் ஆழமான புலமை பெறுவார்கள். இது தான் சென்னையிலும், பிற இந்தி பேசாத மாநிலங்களிலும் நிலவும் கலக்கத்துக்குக் காரணம்.

இந்தப் பிரச்சினையில் அரசாங்கத்தின் முடிவுக்கு ஆதரவாக அரசியல் சட்டத்தைத் தலைமை அமைச்சர் காட்டுவது வியப்பளிக்கிறது. யாருக்கு வேண்டுமானாலும் அரசியல் சட்டம் புனிதமானதாக இருக்கலாம்; ஆனால் நம்முடைய காங்கிரஸ் அரசுக்கு மட்டும் அப்படியன்று. முதிர்ந்த அரசியல் ஞானிகளும், தலைவர்களும், அறிஞர்களும் முழுமூச்சாக எதிர்த்தும் நமது அரசியல் சட்டம் பலமுறை திருத்தப்பட்டிருக்கிறது; பெருமுறை மன்றங்களின் தீர்ப்புக்கள்கூட பயனற்றுப் போகிற அளவுக்கு, ஆளுங் கட்சியின் கொள்கைகளுக்கு ஏற்ப, சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. ஆளுங் கட்சியின் நிலையான நன்மையைக் கருதி, எழுந்துள்ள நெருக்கடியை ஒட்டி, அனைத்துலக மட்டத்தில் நம்நாடு அதற்குரிய உயரிய இடத்தைப் பெறும் வகையில், தேவையானால் சட்டத்தைத் திருத்தியாவது, அதன் 17-ம் பிரிவைத் தள்ளிவைக்க நடவடிக்கை மேற்கொள்ளுவோம். இன்றுள்ள நிலையே இன்னும் பல தலைமுறைகளுக்கு நீடிக்கட்டும். நாடு நலம் பெற்று, நல்ல நிலை நிலவுமானால் அன்று நம் மொழிகளில் சிறந்த மொழியைத் தேர்ந்தெடுத்து அதை ஆட்சிமொழி ஆக்குவோம்.

எஸ். கோவிந்தசாமி, சென்னை.
மெயில் 31—1—65

✻

## காந்தியார் காட்டிய வழி

வரும் குடியரசு நாளைச் சிலர் துக்க தினமாகக் கொள்ள இருப்பதையும், சட்ட மன்றத்தில் முதலமைச்சர் எச்சரித்ததையும் ஒட்டி, உங்கள் வாசகர்களுக்கு ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்திய விடுதலைச் சிற்பி மகாத்மா காந்தியடிகள்—1947 ஆகஸ்ட் 15—முதல் விடுதலை விழா நாளையே துக்க நாளாகக்

கடைப்பிடித்தார். நாடு முழுமையும் விழாக்கோலம் பூண்டிருந்த அந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நாள் முழுமையையும் அவர் உண்ணாநோன்பிலும், வழி பாட்டிலும் அமைதியாகக் கழித்தார். அவர் உயிரோடு இருந்திருந்தால் தொடர்ந்து வந்த விடுதலை நாட்களை யும் துக்க நாட்களாகவே கடைப்பிடித்திருப்பார். காந்தி யாரின் இந்தப் போக்கில் காங்கிரஸ்காரர்கள் எந்தக் குறையுங் காணவில்லை. இந்தி ஆட்சி மொழியாகத் திணிக்கப்படுவதால் தாங்கள் பாதிக்கப்படுவதாகவும், தற்குறித்தனத்துக்குத் தள்ளப்படுவதாகவும் கருதி, 1963 ஆட்சி மொழிச் சட்டப்படி அது நடைமுறைக்கு வரும் நாளைத் துக்க நாள் என்று தமிழர்கள் சொல்லும் போது மட்டும் அவர்களைத் தடுப்பதற்கு இந்த அரசுக்கு என்ன உரிமை இருக்கிறது? அன்று உண்ணாநோன்பு இருப்பதும், ஆட்சியாளர் அறிவு தெளிய வழிபாடு செய்வதுந்தான் நமது துக்கத்தைத் தெரிவிக்கும் சரியான வழியாகும்.

என். பாலசுப்பிரமணிய அய்யர், கோயம்புத்தூர்.
இந்து 25—1—65

✻

## நிதானமிழந்த முதலமைச்சர்

மூன்று தலைமுறைகளாகக் காங்கிரசை உறுதி யாகப் பின்பற்றும் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவன் நான். என்றாலும் மொழிப்பிரச்சினையில் நம் முதலமைச் சர் நடந்துகொண்ட முறையைக்கண்டு எழுந்த ஆத்தி ரத்தை என்னால் அடக்க முடியவில்லை. இந்தப் பகுதி மக்கள் தாங்கள் விரும்பாத ஒரு மொழியை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்ற உண்மையை, கட்சி வேறுபாட்டை மறந்து, டெல்லியில் உள்ள ஆட்சி யாளர்களுக்கு நாம் எடுத்துச் சொல்லி இருக்க வேண்டும்.

(உணர்ச்சி வேகத்தில், நிதானமிழந் திருக்கும்) முதலமைச்சர் மறு பரிசீலனை செய்து தமக்கே பதில் அளித்துக் கொள்ளவேண்டி இந்த வேண்டுகோளை ஆர்வத்தோடு நான் விடுக்கிறேன். வேகமாகத் திணிக் கப்படுகிற இந்தி, பிரிவினைக்கு வித்தூன்றுகிறது என்று உறுதியாகக் கருதுகிற பொழுது — மத்திய கல்வி அமைச்சர் போன்ற தெளிவு பெற்ற மத்திய அமைச்ச கத்தைச் சேர்ந்தவர்களே அதை ஒப்பும்பொழுது, அந்தத் திணிப்புக்கு எதிராக (அமைதியாக, முறை யாக)த் தம் வெறுப்பைத் தெரிவிப்பது மக்களாட்சியில் எப்படிக் குற்றமாகும்? குடியரசு நாளில் அல்லாமல் வேறொரு நாளில் இந்தி திணிக்கப்படுமானால் குடியரசு நாளில் இந்த ஆர்ப்பாட்டம் இருக்குமா?

இப்பொழுதுகூடப் பரவாயில்லை. நம்முடைய நிலையை முதலமைச்சர் மத்திய அரசுக்குத் தெரிவித்து முதல் நடவடிக்கையாக இந்தித் திணிப்பு நாளைத் தற்காலிகமாகவாவது தள்ளிப்போடுவதுதான் அறி வுடைமையாகும்.

ஆர். எஸ். ஐயர், சென்னை.
இந்து 25—1—65

✻

ஜனவரி 26 முதல் இந்தியை இந்தியாவின் ஆட்சி மொழி ஆக்குவதன் மூலம் நம் தலைவர்கள் பிரிவினைக்கு விதை விதைத்து விட்டார்கள். நாம் பெற முயல்கிற ஒருமைப்பாடு இதனால் குலையும், குழப்பவாதிகளுக்கு மேலும் ஒரு வாய்ப்பைக் கொடுத்து நம் பொருளாதார முன்னேற்றத்தைத் தடுத்துவிட்டார்கள்.

கே. இராஜாமணி, புது டில்லி
ஸ்டேட்ஸ்மேன் 29—1—65

✻

இந்தியை ஆட்சி மொழியாக்குவது, இந்தி பேசாத மக்களுக்கு நேரு அளித்த உறுதிமொழிக்கு முரணா னது. பொதுமக்களுக்கு வேதனையளிக்கக்கூடிய பல மாற்றங்களைக் காங்கிரஸ் ஆட்சி தன் விருப்பம்போல் செய்து வருகிறது. நாட்டு ஒற்றுமையைப் பாதிக்கிற இத்தகைய பிரச்னைகளில் புத்திசாலித்தனமான முடிவு கள் செய்வது நல்லது.

ஆர். ஆர். சந்திரா, கல்கத்தா
ஸ்டேட்ஸ்மேன் 29—1—65

✻

இந்தியா, பல மொழிகள் வழங்கும் நாடாகையால் நம்முடைய எல்லா மொழிகளுமே ஆட்சி மொழிகள் ஆகவேண்டும். ருஷ்யா, ஸ்விட்சர்லாந்து, கனடா, பாகிஸ்தான் போன்ற நாடுகளில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் தேசிய மொழிகளாகவும், ஆட்சி மொழி களாகவும் உள்ளன. இந்த நாட்டின் தலைவர்களும், தலைமக்களும் அதைச் செயல்படுத்துவதில் அக்கறை காட்டுவதே முறையாகும்.

மகான் சந்திர தேவ்
சத்யன் முகர்ஜி
சசாங்க சக்ரவர்த்தி
மந்தோஷ் பௌமிக்
கல்கத்தா
ஸ்டேட்ஸ்மேன் 29—1—65

✻

இந்தி பேசாத மக்களுக்கு ஆங்கிலம் எவ்வளவு அந்நியமோ இந்தியும் அவ்வளவு அந்நியம் என்பதை இந்தி வெறியர்கள் உணரவேண்டும்.

இப்போதுள்ள நிலை அப்படியே நீடிப்பதே ஒருமைப் பாடு வளர வழியாகும். இந்தி பேசாத மக்களுக்கு நேரு தந்த உறுதிமொழி காப்பாற்றப்பட வேண்டும். அதுவே தெற்கே ஆளுங்கட்சியின் கையை வலுப் படுத்தும்.

இந்தி மாநிலங்களின் நெருக்கடிகளுக்கு அஞ்சி அவசரப்படுவது ஆபத்தாகவே முடியும்.

இராஜன், கல்கத்தா
ஸ்டேட்ஸ்மேன் 29—1—65

✻

## இந்தி வெறி காணீர்!

"ஆங்கிலம் இங்கே நீடிக்கிற வரையில் படித்தவர் களுக்கும் பாமரருக்கும் இடையே உண்மையான நேசத்தொடர்பு இருக்க முடியாது; படித்தவர்கள் தாங் கள் இந்த மண்ணுக்கு எஜமானர்கள் என்று எண்ணு வார்கள்" என்று கிருபளானி குறிப்பிட்டமைக்கு விளக்கம் தேவைப்படுகிறது.

படிக்காத பாமரர்கள் இந்தி படிப்பார்கள் என்று உண்மையாகவே அவர் நம்புகிறாரா? அல்லது இந்திக் காரர்கள் தாங்கள்தான் இந்தத் துணைக்கண்டத்தின் எஜமானர்கள் என்று நினைப்பதை அவர் விரும்பு கிறாரா?

ஒரு சுத்த வீரனைப்போல அவர் தமிழிலே பேசி யிருக்க வேண்டும். அல்லது இந்தியாவின் பதினான்கு

மொழிகளும் ஆட்சி மொழிகளாகவேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறாரா?

இந்திக்காரர்கள், அரசியல் கட்சி வேறுபாடில்லாமல், இந்தி பேசாத மக்களின் மொழி, கலை, மரபின்மீது ஆதிக்கம் செலுத்த விரும்புகிறார்கள் என்பதைத் தானே அவர் போக்கு காட்டுகிறது? இந்தி பேசாத தலைவர்கள் விழிப்பாக இருந்து உண்மைகளை அணுகுகிற நேரம் இது. ஆருடங்கணிப்பதும், ஆறுதல் உரைகளும், உறுதி மொழிகளும் எந்தப் பயனையும் தரமாட்டா. இந்தி வெறியர்களின் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாமல், தாம் தந்த உறுதிமொழியைத் தமது சொந்தக் கருத்து என்று நேரு சொல்ல நேரிட்டதை நினைவில் கொள்ளவேண்டும்.

எம். கிருஷ்ணன், சென்னை

இந்து 30—1—65

✽

## மேலும் மோசமாகிறது

இன்று இந்தியாவில் காணப்படும் ஒருமைப்பாடு தான் என்ன? வடக்கே உள்ளவர்கள் இந்திக்கு வெற்றி விழா கொண்டாடிக்கொண்டிருக்கும் நேரத்தில் தெற்கே உள்ளவர்கள் துக்கநாள் கடைப்பிடிக்கிறார்கள். மொழிப்பிரச்சினையை அரசாங்கம் தவறுகக் கையாண்டதன் விளைவு இது. அன்றாடச் சோற்றுக்கே மக்கள் ஆலாய்ப் பறக்கிறபோது இந்தப் பிரச்னையை இவ்வளவு அவசரமாக உருவாக்குவானேன்? எல்லா மாநிலங்களும் (மாநில அரசுகளல்ல; மாநிலமக்கள்) ஒப்புக்கொண்டால்தான் இந்தி ஆட்சிமொழி ஆக்கப்படும் என்று இந்தி பேசாத மக்களுக்கு காலஞ்சென்ற தலைவர் நேரு மீண்டும் மீண்டும் உறுதிமொழி அளித்தார். அவரது உறுதிமொழிகள் தூக்கி எறியப்பட்டு விட்டன.

தனக்கு ஏற்படப்போகும் விளைவுகளைக் கருதாமலே அரசாங்கம் மக்களின்மீது இந்தி மொழியைத் திணிக்கிறது. ஏற்கனவே அரசாங்கத் துறைகள் நிதானமாக இயங்குவதாகப் பொதுமக்கள் குறை சொல்கிறார்கள். அதற்குப் பரிகாரம் தேடுவதற்குப் பதிலாக, அதை மேலும் மோசமாக்குகிறார்கள்.

நடேஸ். கே. மூர்த்தி, சென்னை

இந்து 30—1—65

✽

## பசுவைக் கொன்று...!

அறிவுலகமும், கல்வித்துறை நிபுணர்களும் எதிர்த்துங்கூட அரசியல் தலைவர்கள் இந்தியை ஆட்சி மொழியாக்கி மக்கள்மீது திணித்துவிட்டார்கள். சிதறுண்டுகிடந்த இந்தியாவை இணைத்துவைத்து, இரு நூருண்டுகளாகக் கட்டிக்காத்த பெருமை ஆங்கிலத்துக்கு உண்டு. அந்த ஆங்கிலத்தைத் துரத்திவிட்டு இந்தியாவைப் பலமொழி நாடாக்கித் தரங்கெடுத்து விட்டார்கள். 'பசுவைக் கொன்று செருப்பு தானம் கொடுத்த கதை'தான் நினைவுக்கு வருகிறது.

எஸ். விஜேதா, சென்னை

இந்து 30—1—65

✽

## எப்படிப் பொருந்தும்?

'இந்தியை எதிர்க்கிறவர்கள், ஆங்கிலத்தை பயிற்சி மொழியாகவோ ஆட்சி மொழியாகவோ கொள்ளாத நாடுகளின் முன்னேற்றத்தைத் துச்சப் படுத்துகிறார்கள்' என்று முன்னாள் மத்திய அமைச்சர் ஒருவர் சொல்லுகிறார்.

ஒன்றே அல்லது ஒருசில மொழிகள் மட்டுமோ வழங்கும் நாடானல் அங்கே ஒரு மொழியை ஆட்சி மொழியாக்கிக்கொள்வது சுலபம்.

எங்களுடையதுதான் தலைசிறந்த மொழி என்று கருதும் எண்ணற்ற மொழிகளைப் பேசும் பல இன மக்களைக் கொண்ட ஒரு நாட்டுக்கு இது எப்படிப் பொருந்தும்?

காலவரையறையின்றி ஆங்கிலமே ஆட்சி மொழியாக இருக்கவேண்டும்.

இராமு, காஞ்சிபுரம்

இந்தியன் எக்ஸ்பிரஸ் 30—1—65

✽

## காலதாமதம் கூடாது

தங்கள் தலையங்கத்தையும், தங்கள் 29—1—65 இதழில் வெளியான தலைமை யமைச்சர், உள்துறை அமைச்சர் பேச்சுகளையும் படித்ததிலிருந்து, சம்பந்தப் பட்டவர்கள் பிரச்சினையைச் சரியாகப் புரிந்துகொள்ள வில்லை என்ற முடிவுக்கே நான் வருகிறேன். ஏற்பட்டுள்ள எதிர்ப்பு மாற்றத்தைக் குறித்து அன்று, மாறுதல் வேகத்தைக் குறித்துத்தான் என்ற அடிப்படையில் அவை அமைந்துள்ளதாகத் தெரிகிறது. அந்த ஊகம் தவறானது.

நம் தமிழ்ச் சகோதரர்களைப் பொருத்தவரையில், எதிர்ப்பு மாற்றத்தைக் குறித்துத்தான். இதுவரை உள்ளதுபோலவே ஆங்கிலமே நீடிக்கவேண்டும். இன்றோ வேறு என்றோ இந்தி இணைப்பு மொழியாவதை அவர்கள் விரும்பவில்லை. அமைச்சர்கள் தந்திருக்கும் உறுதிமொழிகள் எல்லாம், "நீங்கள் விரும்பவில்லை என்றால், ஒரே மூச்சில் இந்தியை ஏற்றுக்கொள்ள வேண்டாமே, மெல்ல மெல்ல நீங்கள் அதை ஏற்றுக் கொள்வதை நாங்கள் அனுமதிக்கிறோம். ஆனால் இந்த நூற்றாண்டின் முடிவிலாவது இந்தியை ஏற்றுக்கொள்ளுவதற்கு நீங்கள் உங்களை ஆயத்தம் செய்துகொள்ளுங்கள்" என்ற முறையில் உள்ளன.

இந்தியா பல மாநிலங்களை உள்ளடக்கியது. ஆட்சிமொழிக் கோணத்திலிருந்து பார்த்தால், அதை ஆங்கில ஆதரவு மாநிலங்கள், இந்தி ஆதரவு மாநிலங்கள் என்று இரண்டாகப் பிரிக்கலாம். இந்தி தேவையில்லை, ஆங்கிலமே தொடர்ந்து நீடிக்கவேண்டும் என்று கருதும் மாநிலங்களுக்கு அப்படிச் செய்ய உரிமை இருக்கவேண்டும். இந்த நேரத்தில் அமைச்சர்கள் தரும் வாய்மொழி உறுதிகளால் பலன் இல்லை. 'சென்னைபோன்ற இந்தி மாற்றத்தை விரும்பாத மாநிலங்களின் நன்மைக்காக ஆங்கிலமும் இந்தியும் ஒரே அளவு தகுதியுள்ள ஆட்சிமொழிகளாக இருக்கும். இந்த மாநிலங்களைப்பொருத்தவரை இன்றுள்ள நிலையே என்றும் நீடிக்கும்' என்று பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றவேண்டும்.

டெல்லிக்காரர்களால் மதிக்கப்படுகிற பொது அறிவுமிக்க ஒருவரை நாம் காங்கிரஸ் தலைவராகப் பெற்றிருக்கிறோம். இந்த வகையில் ஒரு தீர்வு காண்பதில் அவர் காலதாமதம் செய்யக்கூடாது.

ஜெகன்னாததாஸ் கோவிந்ததாஸ் சென்னை

இந்தியன் எக்ஸ்பிரஸ் 30—1—65

## செப்புமொழி பதினெட்டுடையாள்

'நமது பாரம்பரியத்தில் வேர்க்கொண்ட தேசிய மொழியான இந்தியைப் பரப்புவதால் யாரும் இடர்ப்பட மாட்டார்கள்; ஏனெனில் பிராந்தியத் தாய்மொழிகளும் கூடவே வளர்ந்துகொண்டிருக்கும்' என்ற நந்தாவின் அறிவிப்பு நமக்குப் புதிராக இருக்கிறது. இந்திமட்டும் தான் நம் நாட்டின் தேசியமொழி அன்று. பிராந்திய மொழிகள் என்று சொல்லப்படும் எல்லாமே நம் முடைய பாரம்பரியத்தில் வேர்க்கொண்ட தேசியமொழி கள்தான். 'செப்புமொழி பதினெட்டுடையாள் எனிற் சிந்தனை ஒன்றுடையாள்' என்று இந்தியத்தாயை நம் தேசிய கவி பாரதி பாடி இருக்கிறார். ஆக, நமக்கென்று ஒரு மொழி இல்லாததால் அல்ல, நாம் ஆங்கிலத்தை நீடிக்கச்சொல்வது; பதினான்கு மொழிகள் நமக்குத் தேசிய மொழிகளாக இருப்பதால்தான்.

அ. அரங்கநாதன், சென்னை

இந்தியன் எக்ஸ்பிரஸ் 30—1—65

✲

## நெஞ்சில் மூண்டது!

இராஜாஜிபோன்ற தென்னகத் தலைவர்கள் மாறு பட்ட கருத்துக்களைத் தெரிவித்துவிட்டபிறகு இந்தியை ஆட்சிமொழி ஆக்குவதில் மத்திய அரசு மறுசிந்தனை செய்யவேண்டும்.

இந்தியைத் தாய்மொழியாகக்கொள்ளாத சுவாமி தயானந்த சரசுவதியும், காந்தியடிகளுந்தான் இந்தியை ஆட்சிமொழி ஆக்கவேண்டுமென்றார்கள். இராஜா ஜியை இந்தியின் தென்னகத் தந்தை என்று சொல் வது பொருத்தம். பல அரசியல்வாதிகள் களங்கம் கற் பித்தாலும், இராஜாஜியின் மனமாற்றத்துக்குக் கார ணம் இல்லாமல் இல்லை. அன்றைய நிலையில் வெள்ளை ஆதிக்கத்தின் அடிப்படையாக ஆங்கிலம் கருதப்பட்ட தால், இந்தியை ஆட்சிமொழி ஆக்கலாம் என்றார் காந்தியார். ஆனால் இன்றுள்ள நிலை வேறு. குடியரசுத் தலைவர் ஆங்கிலத்தில் உரையாற்றியபொழுது இந்திக் காரர்கள்செய்த வெளிநடப்பு, நம் வெறுப்பை வளர்த்து விட்டது. இப்படிப்பட்ட வெறிச்செயல்கள், தெற்கை வடக்கு அடிமைகொள்ளத் துடிக்கிறது என்ற எண் ணத்தைச் சராசரி தென்னிந்தியக் குடிமக்களின் மனத் தில் ஏற்படுத்திவிட்டன.

மொழிப் பிரச்சினையைவிட நாட்டின் ஒற்றுமையில் மெத்த அக்கறைகாட்டும் நந்தா, அரசியல் சட்டத்தின் 17-ம் பிரிவைத் தள்ளிப்போடுவதன் மூலம் தென்னிந் திய சராசரி குடிமக்களின் நெஞ்சில் மூண்டுள்ள பீதியைக் களைந்தெறியவேண்டும்.

ஏ. ஆர். நரசிம்மன், திருப்புத்தூர் (வ. ஆ.)

இந்தியன் எக்ஸ்பிரஸ் 26—1—65.

✲

## வெந்த புண்ணில் வேல்!

ஜனவரி 26-இந்த நாட்டின் ஏற்றத் தாழ்வுகளைப் பறைசாற்றும் நாள். (சிலர் சொல்வதுபோல வரை யறையற்ற காலத்துக்கு அன்றி) பத்தாண்டுகளுக்கு மட்டுமே ஆங்கிலம் மாற்றுமொழியாக நீடிக்கும் என்று அனுமதித்ததன்மூலம், நாடு அழிவு நோக்கிச் செல்வ தைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

இந்தி பேசும் மக்களின் ஆங்கில எதிர்ப்பு, ஆட்சி மொழிச்சட்டம் உருவாகக் காரணமாகிற அதே நேரத் தில், இந்தி பேசாத மக்களின் அதே அளவு ஆழமான உறுதியான இந்தி எதிர்ப்பு உணர்ச்சி, ஏளனத்துக்கும் ஏமாற்றத்துக்கும், அலைக்கழிப்புக்கும் அலட்சியத்துக் கும் ஆளாவது துரதிர்ஷ்டவசமானதாகும். தெற்கில், குறிப்பாகத் தமிழகத்தில் அந்த எதிர்ப்பு பெருருக் கொண்டிருக்குமானால், அந்த உணர்வு நாட்டின் பிற பகுதிகளிலும் பரவி இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்தி பேசும் மக்கள் ஆங்கிலத்தை ஒருக்காலும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்றால், தமிழகம் எப்படி யும் இந்தியை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டுமென் றால், இரண்டுமொழிகளுமே, குறிப்பிட்ட காலத்துக்கு அன்றி, நிலையான ஆட்சிமொழிகளாக இருக்கட்டும். அதுவே தெற்கு, வடக்கு இரண்டுக்கும் சமரசமான தீர் வாக அமையும். ஆனால் ஆட்சிமொழிச் சட்டம் வள மையை எல்லாம் வடக்குக்கே வாரி வழங்கிவிட்டது.

ஆட்சிமொழிச் சட்டத்தின்படிதான் இந்தி திணிக் கப்படுகிறது என்று இன்னமும் சொல்லிக்கொண்டி ருப்பது பொருளுள்ள வாதமாகாது. ஆங்கிலமும் இணை மொழியாக நீடிக்க அனுமதிக்கப்படும் என்பது தூண்டிவிடும் பேச்சாகவே இருக்கிறது. அது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதாகவே அமையும். ஏனென் றால் 'போனால்போகிறது' இந்தி கற்றுக்கொள்கிறவரை ஆங்கிலத்தைப் பயன்படுத்திக்கொள். அதுவும் நீ நல்ல திறமைசாலி. விரைவில் கற்றுக்கொள்வாய்' என்று அவர்கள் சொல்வதாகவே அர்த்தம்.

தென்னக மாந்தரின் அச்சத்தையும், கவலைகளை யும் தெளிவாக வெளிப்படுத்தி, ஆட்சிமொழிச் சட்டம் பற்றி எழுதுகையில் இராஜாஜி, 'ஆட்சிமொழிச்சட்டம், தென்னக மக்களை அடிமைகொள்ளப்பட்ட மக்களாக, இரண்டாந்தர மூன்றாந்தரக் குடிமக்களாகவே ஆக்கும்' என்றார்.

தென்னகத்தில் மூண்டுள்ள இந்தப் பற்றுணர்வு தென்னகத்தோடு நின்றுவிடும் என்று எப்படிச் சொல்லமுடியும்?

டபுள்யூ. வி. இராசகோபால், சென்னை

இந்தியன் எக்ஸ்பிரஸ் 26—1—65.

✲

## ஊமைகளாவோம்!

இன்று தமிழ்க் காங்கிரசார் இந்தித் திணிப்பை தவிர்க்க முடியாத தீங்கு என்று கருதுவார்களானால் அது மெல்ல வளர்ந்து பெருந்தீங்காய்—தேவையற்ற தீங்காய் முடியும் நிலை நிதானமாக — ஆனால் நிச்சய மாக வரும், இன்று நாம் வாய்மூடி மௌனிகளாக இருப்போமானால் பின்னால் காலாகாலத்துக்கும் ஊமை களாகவே ஆக்கப்பட்டுவிடுவோம்.

எஸ். சூரியநாராயணன், திருச்சி

இந்து 29—1—65

✲

## பாதுகாப்புக்கும் ஆபத்து!

அண்மையில் மீனம்பாக்கம் விமானதளத்தில் செய்தியாளர்களுக்கு நந்தா அளித்த விளக்கமோ, டெல்லியிலிருந்து செய்தித்துறை அளிக்கும் கொள்கை விளக்கங்களோ ஜனவரி 26க்குப் பிந்திய நிலையைச் சுட்டுக்காட்டுவதாக இல்லை. இந்தி மாநிலங் களான உ.பி., பீகார், மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான் ஆகியவற்றின் ஒவ்வொரு அமைச்சகத்திலிருந்து வரும் ஒரு கட்டாவது இந்திக் குறிப்பைக் கொண்

டிருக்க வேண்டும் என்று கட்டளையிட்டிருப்பதாகத் தெரிகிறது. மத்திய செயற்துறையில் இந்தி தெரியாதவர்கள் கணிசமாக இருக்கின்றனர். அவர்கள் நன்மைக்காக ஒவ்வொரு அமைச்சகத்திலும் ஒரு மொழிபெயர்ப்புக் கிளை அமைக்கப்படும் இந்தி மாநிலங்களுக்கான ஆங்கிலக் குறிப்புகளும், சுற்றறிக்கைகளும் முதலில் இங்கே அனுப்பப்பெறும். இந்தக் குறிப்புகளின் அளவு பெருகப் பெருக இந்தக் கிளைகளும் பெரிதாக்கப்படும். இந்தக் குறிப்புகள் பல விஷயங்களைப்பற்றி இருக்குமாதலால் இந்திக் கலைச்சொற்களின் தேவை அதிகமாகும். புதுச்சொற்களைக் கண்டுபிடிக்க ஆராய்ச்சி செய்யவேண்டி வரும். சில சமயங்களில் விசித்திரமாகப் பொருள்படும் சொற்களையுடைய தந்திரமான மொழி ஆங்கிலம். பாதுகாப்புத் துறையில் பயன்படும் இயந்திர டாங்குகள் பற்றிய ஒரு பிரச்சினை அண்மையில் எழுந்தது. 'டாங்கு' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு 'தலாப்' என்ற இந்திச் சொல்லை ஒரு மொழிபெயர்ப்பாளர் கையாண்டார். 'தலாப்' என்ற சொல் குளம், ஏரி என்ற பொருளுள்ளது. ஆனால் மேல் நிலையில் இந்த ஒரு அலுவலர் அதைத் தவிர்த்து விட்டார்.

இனி இந்த மொழிபெயர்ப்புக் கிளைகளில் மொழி பெயர்க்கப்படுவதற்காகக் கட்டுக்கள் வந்து குவியும். அகில இந்தியப் பிரச்சினைக்கான குறிப்பாகவோ சுற்றறிக்கையாகவோ இருந்தால் இந்தி பேசாத மாநிலங்களின் நன்மைக்காக அது ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்படும். இந்தச் சிக்கல் இல்லாதபோதே ஒரு அமைச்சகத்திலிருந்து பொறுப்பான அலுவலர் கையெழுத்திட்டு ஒரு கடிதம் வெளியேற இரண்டு நாட்களாகின்றன. இனி அவரோ அவர் துணைவரோ மொழி பெயர்ப்பைச் சரிபார்க்க விரும்பலாம். இந்த இரட்டைச் செயல்முறையால் எவ்வளவோ நேரமும், உழைப்பும் வீணாகின்றன. இன்றைய நிர்வாகத்தில் நேரம் வீணாவதுபற்றி யாரும் அக்கறை கொள்வதில்லை. சென்ற ஆண்டு சனவரி தொடக்கத்தில் உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினைபற்றி இந்தி மாநில முதலமைச்சர் ஒருவருக்குக் கடிதம் எழுதினேன். ஆறு மாதம் கழித்து ஜூலையில், அவரது அணுக்கச் செயலரிடமிருந்து கடிதம் வந்தது—பிரச்சினையைப் பரிசீலித்துக்கொண்டிருப்பதாக. அதற்குப் பிறகு இன்றுவரை எனக்கு எந்தத் தகவலும் இல்லை. எனவே அவர்கள் இன்னும் பரிசீலித்துக்கொண்டிருக்கிறார்கள் என்றே நம்புகிறேன்.

ஒன்றுமட்டும் உண்மை. இந்தி தெரிந்தவர்களுக்கு இந்த மொழிபெயர்ப்பு அமைப்புகளில் நல்ல வேலை வாய்ப்பு உண்டு. கட்டுக்கள் விரைவில் நகரப்போவதில்லை என்பது மட்டுமன்று தொல்லை; கட்டுக்களில் எழுதப்பட்டுள்ள இரகசியக் குறிப்புக்கள் இரகசியமாக இரா. இந்தியைப் பயன்படுத்தும் ஆர்வத்தில் பாதுகாப்புத்துறை இரகசியங்களும் பாதிக்கப்படும்.

பி. சிவராவ். புதுடில்லி
இந்து 29—1—65

✻

# மீண்டும் அடிமை!

வரலாற்றிலிருந்து நாம் கற்ற ஒரேபாடம், நாம் ஒன்றுமே கற்றுக்கொள்ளவில்லை என்பதுதான். வரலாற்றிலிருந்து கற்றுக்கொள்ள என்ன தேவை இருக்கிறது? வரலாறு மீண்டும் மீண்டும் திரும்புகிறதே. வடக்கே இருந்த இந்து அரசர்கள் வேறுபட்டு நின்ற காரணத்தால் முஸ்லிம் ஆட்சி இங்கே வந்தது, இந்திய மன்னர்கள் தங்களுக்குள் போரிட்டுக்கொண்டமையால் வெள்ளையர் ஆட்சிக்கு ஆளாக்கப்பட்டோம். பிரிட்டிஷாரின் ஒரே ஆட்சியின்கீழ் நூற்றைம்பது ஆண்டுகள் இருந்தோம். இந்தியாவின் ஒற்றுமைக்கு ஆங்கிலம் ஒரு கருவியாக இருந்தது. வணிகம், பொருளாதார, தொழில் துறைகளிலும், நிர்வாகத்திலும் ஆங்கிலத்தின் உதவியால் நாம் விரைந்து முன்னேறிக்கொண்டிருந்தோம். சுருங்கச் சொன்னால், உலக மொழியான ஆங்கிலம் நமக்கு இணைப்பு மொழியாகப் பயன்பட்டது. இப்போது ஆங்கிலத்தை நீக்கிவிட்டு இந்திக்கு இடம் தருவோமானால் நம் இணைப்பு தளர்ந்து நாம் மீண்டும் இன்னொரு ஆட்சிக்குத்தான் அடிமைப்படுவோம். 1962 அக்டோபருக்குப் பின் வேறென்ன சாட்சிவேண்டும்?

கே. என். அய்யங்கார், சென்னை
இந்து 2—2—65

✻

ஆங்கிலம் என்றுமே பிரிவினைக்கருவியாக இருந்ததில்லை. இந்தியை ஆட்சிமொழியாக்குவதால் நம் தேசியத் தன்மை வளரும் என்று தெளிவுள்ள யாரும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். நாடு காப்பாற்றப்படவேண்டும் என்பதில் உள்ளார்ந்த அக்கரை எல்லோருக்கும் உண்டு. நாட்டு ஒற்றுமைக்குத்தான் முதலிடம் தரப்படவேண்டும். இந்தி மக்களின்மீது திணிக்கப்படுமானால் இந்த ஒற்றுமை நிச்சயம் நெருக்கடிக்கு ஆளாகும்.

இ. எம். கே. நாயர், சென்னை
இந்து 2—2—65

✻

# இந்தி வெறியர் மூளை

பலமொழிகள் வழங்கும் நம்முடைய நாட்டுக்கு இந்தி ஏன் இணைப்பு மொழியாக இருக்கவேண்டும் என்று என்னைப்போலவே பலரும் கருதுவர். அந்த வகையில் மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கையும், அரசியலில் உத்திரப்பிரதேசத்தாரின் மேல்நிலையைக் காட்டவே பயன்படும். அவர்கள் தங்கள் எண்ணிக்கை பலத்தை நமக்கு எதிராகப் பயன்படுத்துகிறார்கள் என்றே தென்னகத்தார் கருதுகிறோம். ஆட்சிமொழியாகவும் பயிற்சி மொழியாகவும் ஆக்கப்படும் அந்த மொழியின் தகுதி, வளம், செழுமை முதலியன கடுமையாக விவாதிக்கப்பட்டன. அந்த வகையில் தென்னிந்திய மொழிகளில் எதுவும் இந்தியைவிட மிகவும் சிறந்தது, தகுதிவாய்ந்தது என்று தென்னகத்தாராகிய நாங்கள் கருதுகிறோம். ஆனால் அது வேறு விஷயம்.

இந்தியாவில் உள்ள எவருக்கும் ஒரே அளவு சாதக பாதகமான ஆங்கில மொழி — அதன் சொல் வளம், மொழிச் சிறப்பு, அருமை பெருமைகள் பற்றி நாம் பேசவேண்டாம், ஆட்சி மொழியாகச் சிறப்பாகப் பயன்படும்போது, விரும்பாத நம்மீது வளராத இந்தியைத் திணிக்கவேண்டுமென்று மத்திய அரசு ஆத்திரப்படுவானேன்? மற்ற மொழிகளையெல்லாம் அடிமைப்படுத்திவிட்டு இந்தி ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்பதுதான் விடுதலைக்கு அவர்கள் கொண்ட பொருளா? இப்படிப்பட்ட போக்கினால் பிரிவினைக்கு—ஆண்டவன் மன்னிப்பாராக—வித்திடுகிறோம் என்பது இந்தி வெறியர்கள் மூளைக்கு ஏன் எட்டவில்லை?

கே. என். ராய், கவாலி (ஆந்திர மாநிலம்)
இந்து 2—2—65

## குடிகாரரிடம்!

'இந்தி பேசாதவர்களிடம் இந்தி பற்றிக் கருத்துக் கேட்பது குடிகாரனிடம் மதுவிலக்குப் பற்றிக் கேட்பது போல' என்று ஜன. 27-ல் புதுடில்லியில் நடைபெற்ற ஆட்சிமொழி மாநாட்டுத் தலைமை யுரையில் லட்சுமி நாராயண் சுதான்சு குறிப்பிட்டிருக்கிருர். இந்தி ஏகாதி பத்தியத்தின் உண்மை நிலையை இது வெளிப்படுத்தி விட்டது. அது மட்டுமன்று; இந்தியாவின் ஒற்றுமை யைக் காப்பாற்றும் பொறுப்பை இந்திக்காரர்களின் கையில் ஒப்படைப்பது மதுவிலக்கைச் செயல்படுத்து வதைக் குடிகாரர்களிடம் ஒப்படைப்பதற்குச் சமமாகும்.

டி. சேஷாத்ரி, கோயம்புத்தூர்

இந்து 2—2—65

✲

## போராடும் மாணவர்கள்

இந்தித் திணிப்பை எதிர்த்து நடத்தப்பட்ட ஆர்ப் பாட்டங்களுக்கும், அதன் விளைவான ஆபத்துக்களுக் கும் பெரும்பாலும் மாணவர்களே காரணம். ஆனல் அதுதான் இந்த மாநில மக்களின் மனக்கொதிப்பின் உண்மையான படப்பிடிப்பு என்பதையும் மறந்து விடுவதற்கில்லை. பக்தவத்சலம், காமராசர், நந்தா, லால்பகதூர் சாஸ்திரி ஆகியோரின் அறிக்கைகள், இந்தக் கிளர்ச்சிகளின் பின்னூடாய் இழையும் உணர் வைச் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை என்பதையே காட்டுகின்றன. பன்னிரண்டு நாட்களுக்குப் பள்ளிகளை யும் கல்லூரிகளையும் மூடவேண்டிய அளவு நெருக்கடி முற்றியுள்ள இந்த நிலையில் அரசியல் பகைவர்களை அவர்கள் தூற்றிக் கொண்டிருப்பதில் பயனில்லை. இந்தக் கிளர்ச்சிகளுக்குக் காரணமாகப் பக்தவத்சலம் தி. மு. க.வைச் சாடுவதும், காமராசர் இராஜாஜியைத் தாக்கிப் பேசுவதும் வீடுபற்றி எரியும்போது கணவன் மனைவி சண்டை போட்டுக் கொள்வதுபோல இருக் கிறது. இந்தக் கிளர்ச்சிகளின் போக்கே, இது அரசி யல் பிரச்சினை அல்ல, வாழ்வா சாவா என்ற உயிர்ப் பிரச்சினை என்பதைக் காட்டிவிட்டது.

ஆங்கிலமும் நீடிக்கும் என்று பன்னிப் பன்னிச் சொல்வது இந்தியை ஆட்சி மொழி யாக்குவதற்குரிய சரியான வாதமாகாது. விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில அரசாங்க ஊழியர்களின் உரிமைக்காகவே நாம் போராடுவதாக அவர்கள் தப்புக் கணக்குப் போடுகிருர்கள். அதனல்தான் திரும்பத் திரும்ப ஆங்கி லமும் நீடிக்கும் என்கிருர்கள்.

படிக்காத பாமரரிலிருந்து படித்துத் தெளிவு பெற்றவர்கள் வரை சமுதாயத்தின் எல்லா நிலை மக்க ளின் தொல்லைகளையும் சரியாகக் கணித்து, ஐக்கிய இந்தியாவில் தாங்கள் இரண்டாந்தரக் குடிமக்களாகி விடுவோம் என்று கருதுவதால்தான், சென்னை மாநில மக்கள் இந்தியை எதிர்க்கிருர்கள் என்பதை அமைச் சர்களும், காங்கிரஸ் தலைவரும் புரிந்துகொள்ள வேண் டும். ஆங்கிலம் நீடிக்குமானல் படித்தவர், பாமர ரிடையே தொடர்பு அற்றுப்போகும் என்று நந்தா வாதிடுவது இந்திப் பிராந்தியத்துக்கு வேண்டுமானல் பொருந்தலாம். நாட்டின் பிற பகுதிகளுக்கு அது பொருந்தாத வாதம். படித்தவன் தன் பகுதிப் பாமர னுடன் தன் தாய்மொழியில் தொடர்பு கொள்கிருன்; பிற மாநிலப் படித்தவர்களுடன் ஆங்கிலத்தில் தொடர்பு கொள்கிருன். ஆங்கிலத்தை நீக்கி இந்தி யைப் புகுத்துவதன் மூலம் நாட்டிலுள்ள பாமர மக்க ளெல்லாம் முதல்தரக் குடிமக்களாகிவிட முடியுமா? ஒருவேளை ஆங்கிலம் நீடிக்குமானல் படித்தவர்கள் மட்டுமாவது முதல்தரக் குடிமக்களாக வாய்ப்பிருக்கும். ஏனெனில் எல்லா மாநிலங்களிலும் குடியுரிமை ஒரே தரத்தில் இருக்கும். ஆங்கிலம் நீக்கப்பட்டு இந்தி புகுத்தப்படுமானல் இந்திக்காரர்கள் முதல்தரக் குடி மக்களாகவும், பிற மாநிலத்தவர்கள் அனைவரும் இரண் டாந்தரக் குடிமக்களாகவுமே நடத்தப்படுவர். எனவே இந்த மாநில மக்கள் அனைவரும் இந்தக் கொடுமையை எதிர்த்துக் கொதித்தெழுந்து போராடுவதில் வியப்பில்லை.

போராடும் மாணவர்களின் நலனில் அக்கறை இருக்குமானல் தங்கள் அரசியல் வாழ்வின் மேன்மைக் காக அன்றி, பொதுமக்களின் நன்மைக்காக, சென்னை மாநில முதலமைச்சரும் காமராசரும் தி. மு. க. தலைவர் களுடனும், இராஜாஜியுடனும் கூடிப்பேசி அவர்கள் கருத்துக்களை மத்திய அரசுக்குச் சொல்லவேண்டும்.

டாக்டர். எம். சந்தோஷம், சென்னை

இந்து 2—2—65

✲

## புனிதமான நோக்கம்

இந்தி பேசாத மக்களின் நன்மைக்காக இந்தி யுடன் ஆங்கிலமும் பயன்படுத்தப்படும் என்று ஆட்சி யாளர்கள் அடிக்கடி அறிவுறுத்துகிருர்கள்.

அப்படியானல் ஆங்கிலம் எவ்வளவு காலம் நீடிக்கும்? பத்தாண்டுகளோ மிக அதிகமாகப்போனல் இருபத்தைந்து ஆண்டுகளோ நீடிக்கும். அதற்குப் பிறகாவது இந்தி ஆங்கிலத்தை முழுக்க முழுக்க அகற்றிவிடும் அல்லவா? அப்போது இந்தி பேசாத மக்களின் கதி என்ன? இந்திச் சகோதரர்களைவிட பாதகமான ஒரு நிலைக்கு அல்லவா அவர்கள் தள்ளப் படுவார்கள்? 'அரசமொழி' பேசாத இரண்டாந்தரக் குடிகளாக அல்லவா அவர்கள் கருதப்படுவார்கள்? முடிவாக பெருமுறை மன்றத்திலும் ஆங்கிலத்துக்குப் பதில் இந்தி இடம்பெறும் என்று அரசு அறிவித்திருப் பது கண்டு நம் கவலை பன்மடங்காகிறது.

நம்முடைய இந்தி எதிர்ப்பு, இன்றைக்கு இந்தி புகக்கூடாது என்பதற்காக அன்று; என்றைக்கோ ஒரு நாளில் அது தனி ஆட்சிமொழி ஆகிவிடுமே என் பதற்காகத்தான். இந்தி பேசாத மக்களின் எதிர்காலச் சந்ததியை அதிதீவிர நாட்டுப்பற்றுக்குப் பலியாக்கி விடக்கூடாது என்ற புனிதமான நோக்கமே நம் போராட்டத்தின் அடிப்படை.

எல்லாருக்கும் அந்நியமொழி என்பதால், யாருக் கும் அது சாதகமாக இராது என்பதால், பெரிதும் பய னுள்ள உலகமொழி என்பதால் ஆங்கிலமே என்றென் றும் நீடிக்கவேண்டும் என்று நாம் விரும்புகிறோம்.

என். ஜி. ராசன், முத்துப்பேட்டை (தஞ்சை)

இந்து 26—1—65

✲

## வித்திட்ட கதை

தென்னகம் தனது முழு எதிர்ப்பையும் இந்திக்கு எதிராகக் காட்டிவரும் இந்நிலையில், அவர்கள் கவலை களை உணரத் தவறக்கூடாது. ஆங்கிலத்தின் நிலைக்கு இந்தி ஒருக்காலும் உயரமுடியாது என்ற நிலை ஒருபுறம் இருக்க, தெளிந்த அரசியல் சிந்தனையாளர்கள் இந்தி ஆட்சிமொழி ஆவதை எதிர்த்துச் சொன்ன கருத்துக் களைக் கவனிக்கவேண்டும். அவர்கள் இந்திய மக்களின் ஒற்றுமையை நெஞ்சார விரும்புகிறவர்கள்,

இந்தியா ஒரு பலமொழி வழங்கும் நாடு என்றாலும் விடுதலை பெற்ற உடன் எழுந்த ஒரு புத்துணர்வினால், அரசியல் நிர்ணய சபையினர் வடநாட்டுக் காங்கிரஸ் உறுப்பினர்களின் எண்ணிக்கை பலத்துக்கு இரையாகி இந்தியே ஆட்சிமொழி என்று சட்டம் செய்தார்கள். விடுதலைபெற்றுப் பதினேழு ஆண்டுகளாகியும் வாக்குரிமையின் சிறப்பும், சீர்மையும் நம் மக்களுக்குப் புரியவில்லை என்றால், வடநாட்டினரின் கோரிக்கைக்கு இணங்கி, இப்படிச் சட்டம் செய்வதன் பயங்கரமான பின் விளைவை, அவர்கள் எங்கே புரிந்து கொண்டிருக்கப் போகிறார்கள்? இனிமையிலாகட்டும், மொழிச் சிறப்பிலாகட்டும், சொல்வளத்திலாகட்டும் இந்திய மொழிகளிலேயே ஒரு சிலவற்றிற்கு அருகே கூட இந்தி வரமுடியாது. உணர்வின் வேகம் மெல்ல அடங்கியது. மக்கள் தங்கள் தவற்றைப் புரிந்து கொள்ளத் தொடங்கினார்கள். கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாகவே தென்னக மக்களும், தெளிவுள்ள சில வடவரும் இந்தியை ஆட்சிமொழியாக்கும் விஷயத்தில் அவசரம் வேண்டாம் என்று எச்சரித்தனர். இந்தியாவின் ஒற்றுமையையும், உறுதியையும் மனத்துள் கொண்டு எழுப்பிய எதிர்ப்பு உணர்ச்சி அரசியல் பிரச்சினையாகக் கருதப்பட்டது கல்வித்துறை அறிஞர்கள், அறிவுசான்ற பெருமக்கள் ஆகியோரின் கருத்துக்கள் ஆளுங்கட்சியால் துச்சமாக மதிக்கப்பட்டன. முடிவாக இந்தக் குழப்பத்தின் இடையே 1965ல் இந்தி ஆட்சிமொழியாகும் என்ற சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவந்துவிட்டார்கள். இதுதான் அவர்கள் பிரிவினைக்கு வித்தூன்றிய கதை.

எ. எ. கபூர், கூனூர்

இந்து 26—1—65

✻

## விசித்திரம்! விபரீதம்!!

தங்கள் 26-1-65 இதழில் இந்தி வழி தேச ஒற்றுமை' என்ற தலைப்பில் மொரார்ஜி தேசாய் எழுதிய கட்டுரையை ஆராய விரும்புகிறேன். பொது மொழியின் தேவைபற்றி விளக்கத்தொடங்கிய தேசாய் திடீரென்று தேசியமொழிப் போர்வைக்குள் நழுவிக் கொள்கிறார். இந்தியாவில் பதினான்கு தேசிய மொழிகள் உண்டு. அவற்றுள் பல சிறந்த பாரம்பரியமுள்ளவை. சின்னஞ்சிறிய ஸ்விட்ஸர்லாந்து நான்கு தேசிய மொழிகளைக் கொண்டிருப்பதுபோலவே நாமும் அந்தப் பதினான்கு மொழிகளையும் தேசிய மொழிகளாகக் கொள்வோம் என்கிறார். ஆனால் பொதுமொழி என்பது ஆட்சிமொழியைப் போன்றது; வெறும் தேசிய மொழி மட்டும் அன்று.

இந்தி பேசாத மக்களுக்கு ஆங்கிலத்தைவிட இந்தி அந்நியமானது. அதுமட்டுமன்று, இந்தி இப்போதுதான் தயாரிக்கப்படுகிறது. ஆங்கிலமோ, திட்டம்போட்டு முன்னேறி உலக நாடுகளுடன் போட்டியிட விரும்பும் நம் நாட்டுக்கு, கட்டாயத் தேவையான உலக மொழி.

ஆயிரத்தில் 15 பேரே ஆங்கிலம் பேசுவதாகத் தேசாய் கூறுகிறார். நம்மில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களே 20%தான். ஆட்சிமொழி என்றால் அறிவுலக மக்களின் மொழிதான் கவனிக்கப்படவேண்டும். நம் படித்தவர்களிடையே ஆங்கிலம் ஆழமாக வேர்க்கொண்டுள்ளது—காங்கிரஸ் அரசியல்வாதிகளே தங்கள் குழந்தைகளுக்கு கிண்டர்கார்டன் வகுப்பிலிருந்து ஆங்கிலப் பயிற்சியே தரும் அளவுக்கு வேர்க்கொண்டுள்ளது.

மேலும் இந்தி பெரும்பாலோரால் புரிந்துகொள்ளப்படாத ஒரு மொழி. இந்தி என்று சொல்லப்படும் இந்த விசித்திரமான மொழி அது வழங்குகிற வட்டாரங்களிலேயே பலவகையிலும் வேறுபடுகிறதாம். அறிவுக்கூர்மையுள்ள மக்கள் எந்த மொழியையும், ஏன் இந்தியைக்கூடக் கற்றுக்கொள்வார்கள். ஆனால் அது படிப்பவர்களின் திறமையைக் குறிக்குமே தவிர, மொழியின் சிறப்பைக் காட்டுவதாகாது. நமக்கு இலக்கியச் செறிவுள்ளதாய், சொல் நயமும் நுண்மையும் உள்ளதாய், எளிமையானதாய், அனைத்துலக அந்தஸ்து பெற்ற ஒரு மொழி வேண்டும். இதில் எதையும் இந்தி என்றும் பெறமுடியாது. ஏனெனில் இந்தி வெறியர்கள் அதைச் செயற்கையாக ஊட்டி வளர்க்கிறார்கள். மொழி இயற்கையாக வளரவேண்டும்.

எஸ். கோவிந்ததாஸ், சென்னை

இந்தியன் எக்ஸ்பிரஸ் 29—1—65

✻

## இந்தியின் அவலட்சணம்

இந்திவழி விஞ்ஞானம் சொல்லித்தரும் ஆசிரியர் என்ற முறையில் இந்தியைப்பற்றி நானும் எழுதுகிறேன்.

இந்திக்காரர்கள் சொல்லுகிறமாதிரி இலக்கிய, விஞ்ஞான நூல்கள் இந்தியில் உள்ளது உண்மை. ஆனால் அவை அண்மையில் வளர்ந்தவை. நாவல்களைப் பொருத்த அளவில், வட இந்திய மொழிகள் எல்லாவற்றிலும்பரிச்சயம் இருந்தால்தான் அவற்றைப் புரிந்துகொள்ளமுடியும்.

விஞ்ஞானத்தைப் பொருத்தவரை விஷயங்களைப் புரிந்துகொள்வது பெருந்தொல்லை. ஒருமுறை நான் விஞ்ஞானப் பாடத்தில் 'போஷிகா' என்ற சொல்லைக் கையாண்டேன். போஷிகா என்றால் உணவுக் குழல்—அன்னப் பாதை என்று அர்த்தம். ஆனால் இந்தி பண்டிதர்களோ மற்றவர்களோ இதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் அந்தச் சொல்லை நான் அரசாங்கக் கலைச்சொல் புத்தகத்திலிருந்துதான் கையாண்டேன். பிரதிபலிப்பு என்பதைக் குறிக்க 'பரவர்த்தன்' என்ற சொல்லை ஆளுகிறார்கள். ஆனால் ஒளிச் சிதறலை எந்தச் சொல்லால் குறிப்பது? 'அவர்த்தன்'? 'வர்த்தன்'?—யாருக்கும் தெரியவில்லை. சில ஆசிரியர்கள் கருத்துப்படி 'உஷ்மா' என்றால் வெப்பம்; 'தாப்' என்றால் வெப்பதட்ட அளவு. வேறு சில ஆசிரியர்கள் 'தாப்'—வெப்பம், 'தாப்க்ரம்'—வெப்பதட்ப அளவு என்கிறார்கள்?

இந்த நிலையில் வெப்பத்தைப்பற்றிக் கேள்வி கேட்டு மாணவன் விடை எழுதினால் என்ன ஆகும்?

இந்தியைத் தாய்மொழியாகக்கொண்ட மாணவர்களிடம் பாடம் நடத்தவே இந்த நிலை என்றால் அரசாங்க நடவடிக்கைகள் எப்படிச் சரிவர நடக்கும் என்பது புரியவில்லை.

இலக்கணத்துக்கு வருவோம்; இந்தியில் பொதுப்பாலே இல்லை. சொல்லின் அமைப்பைக்கொண்டு பால் அறியப்படுகிறது; பொருள்கள் ஆண்பாலாகவும் இருக்கும், பெண்பாலாகவும் இருக்கும். ஆண்மைக்கே உரிய மீசை (முஞ்ச்) இந்தியில் பெண்பால். பெண்மைக்கே உரிய மார்பகம் (ஸ்தன்) இந்தியில் ஆண்பால்.

ஒரு ஆசிரியர், சென்னை

இந்தியன் எக்ஸ்பிரஸ் 29—1—65

✻

4-ம் பக்கத் தொடர்ச்சி

சுட' புதுச்சரக்கு தயாரிப்போர் தயாரிக்கப்படுகின்றனர். இவை எரிச்சலை அல்ல, நகைப்பைத்தான் கிளப்புகிறது. எனவே, முதலமைச்சரின் முடுக்குப் பேச்சினல் மூண்டெழுந்த கேவலம் மிகுந்த கேடுபாடுகளால் தாக்கப்பட்டுத் தொல்லையுற்ற கழகத் தோழர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் ஆகியோருக்கு, ஆறுதலையும் நன்றி:பறிதலையும் தெரிவித்துக்கொள்கிறேன். நிலைமையினை நன்கு ஆராய்ந்து பார்த்திடுவோர், முதலமைச்சர் மூட்டிவிட்ட பகை நெருப்பு, கழகத்தவர்களைச் சுட்டுப் பொசுக்கிவிடவில்லை, மாருக, பொதுமக்கள், குறிப்பாக அறிவாளர்களின் நெஞ்சிலே பெருநெருப்பு மூட்டப்பட்டுவிட்டது என்பதனை உணர்வர், இது மிகப்பெரிய வெற்றி. ஜனவரி 25-வரையில், தி. மு. கழகத்தின் பிரச்சினை என்று சுட்டிக்காட்டப்பட்டுவந்த இந்தி எதிர்ப்பு, அன்றிலிருந்து பொதுப் பிரச்சினையாகிவிட்டது. இந்தக் கட்டம் வந்தேதீரும் என்பதனை அறிந்திருக்கிருேம்; வந்துவிட்டதறிந்து புதிய நம்பிக்கையும் மகிழ்ச்சியும் பெறுகிருேம். யாரோசிலர் — விவர மறியாதவர்கள் — காங்கிரசின் எதிரிகள் — சுதந்திர விரோதிகள் — பிற்போக்காளர்கள் — ஏமாற்ற மடைந்த அரசியல் வாதிகள்—இவர்களே, வேறு எதுவும் கிடைக்காததால், இந்தி எதிர்ப்பு செய்துவருகிருர்கள் என்று பேசி வந்தார்களே, அந்தப் பேச்சைத்தான், கழகத் தோழர்களையும் மாணவர்களையும்,துரத்தி அடித்திடக் கிளம்பியவர்கள், நொறுக்கிப் போட்டுவிட்டார்கள்! அடி விழுந்தது நம்மீது என்று எண்ணிக் கொண்டனர், விளைவு அறிந்திடும் விவேகமற்றுேர்! அடி விழுந்தது, இந்தி எதிர்ப்பு பற்றி இருந்துவந்த அலட்சியப் போக்கின்மீது! அந்தப் போக்கு பொடிப் பொடியாகிவிட்டது! இந்தி எதிர்ப்பு அணி, வியந்து பாராட்டிடத் தக்கவிதமாக, விரிவடைந்து விட்டது, புதிய எழுச்சியுடன் நடைபோடுகிறது. குருதி கொட்டிடவும் கொடுமைகளைத்தாங்கிடவும். நேரிட்டுவிட்டதேஎன்றெண்ணி மனம் குமுறி, தமிழ் மகனே! தமிழ் மகனே! ஏனே பிறந்தாய் இங்கு! என்று ஏக்கம் கொண்டு பேசினேனே; தவறு! தவறு! மிகப் பெருந் தவறு! கொட்டிய குருதி வீண்போகவில்லை! குண்டடி தடியடிபட்டது பயனற்றுப் போய்விடவில்லை. இந்தி எதிர்ப்புப் படைவரிசையைச் சிதறடிக்க, சிறுமதியாளர் திட்டமிட்டனர், ஆனல், இந்தி எதிர்ப்புக்கு, எங்கெங்கிருந்தும், எழுச்சி மிக்க புதுப் புது படைவரிசைகள் கிளம்பிவிட்டன. உறிஞ்சிக் குடித்து உருசி காண எண்ணிய கரடி; தேன்கூடு தன்னைக் கலைக்க முயன்றிட, கூட்டுக்குள்ளிருந்து தேனீக்கள் கூட்டம் கூட்டமாகக் கிளம்பிக் கொட்டி, கரடியைத் துடிதுடிக்கச் செய்துவிட்டது என்று கதை படித்ததுண்டு! இன்று முதலமைச்சர் முறுக்கு மீசையினராக, உருட்டு விழி காட்டுபவராக, மிரட்டல் பேசுப் பேச்சுபவராகக் கோலம் பூண்டார்! அவர் காண்பது என்ன? தமிழகமே போர்க்கோலம் பூண்டு எழுந்த காட்சியை!! கழகத்தவர்கள் பேரிலே தாக்குதல் நடத்தக் கிளம்பினர்...நடைபெற்றது என்ன? ஏனய்யா முதலமைச்சரே! கழகத்தவர்மீது பாய்கின்றீர்! இந்தியை எதிர்ப்பவர்கள் அவர்கள் மட்டும் என்ற எண்ணமோ! பேதமை ஐயா! பேதமை! இந்தியை எதிர்ப்பவர் அவர் மட்டும் அல்ல!! அவர்கள் இந்தியை எதிர்ப்பதும் அவர்களுக்காக மட்டும் அல்ல; நாட்டின் சார்பில் எதிர்த்து வருகிருர்கள்! அவர்கள் மட்டுமா எதிர்க்கின்றனர்? இதோ, நாங்களும் எதிர்க்கின்ருேம்! நாங்களும்!! இந்தி எதிர்ப்பை முறியடிக்கவா சல்லடம் கட்டுகிறீர்; வாள் சுழற்றுகிறீர், நாப்பறை அறைகிறீர்—அதற்கு கழகத்தை அழித்தால் போதாது—நாங்கள் இருக்கிருேம்—நாடு முழுவதும் இருக்கிருேம்—இவ்வளவு பேர்களையும் சுட்டுத் தள்ளிவிட்ட பிறகே இந்திக்கு அரியணைகிடைத்திடும் என்று செப்புகின்றனர்.

இந்த நிலையினைக் கண்டிட நெடுங்காலமாகக் காத்துக் கிடந்தோம்—சில வேளைகளில் நம்பிக்கை கூட நசித்துவிடுமோ என்ற கவலை மனதை அரித்ததுண்டு—ஆனல், குடிஅரசு நாளன்று இந்திக்கு அரசு என்று ஆக்கிடும் கொடுமையினை எதிர்த்திட முனைந்து நின்றேம்—அதற்கும் ஒருநாள் முன்னதாக, முதலமைச்சர் 26ம் நாளன்று மட்டுமே துக்கதினம் கூடாது, 25ல் இருக்கலாம், 27ல் நடத்தலாம் என்று "பெருந்தன்மை" பேசுகிருரே, நாம் 25ம் நாள் துக்கதினம் நடந்துவோம் என்று எண்ணி, கருப்புச் சின்னமணிந்து, கருப்புக்கொடி ஏந்தி, கண்டனக் கூட்டம் நடத்த முனைந்தனர் மாணவர்—எத்தனை எத்தனை கொடுமைகள் — எங்கெங்கெல்லாம் தடியடி, துப்பாக்கிச் சூடு—மாணவரொருவர் சுட்டுவீழ்த்தப்பட்டார்!—பலருக்குப் படுகாயம் — பயங்கரம்—இவைகளைத் தாங்கிக்கொண்டதன் பலன், இன்று இந்தி எதிர்ப்பு எங்கும் கேட்கப்படும் முழக்கமாகிவிட்டதனைக் காண்கின்ருேம்.

> "இந்தித்திணிப்பைக் கடுமையாக எதிர்க்கும் தி.மு.க.வை ஒதுக்கிவிட்டால்கூட, அதே எதிர்ப்புணர்ச்சியைக் காட்டும் பல்லாயிரக்கணக்கானவர்களை எப்படிப் புறக்கணிப்பது?"

என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் கேட்கிறது; இது ஒரு இதழின் கேள்வி மட்டும் அல்ல; நாட்டவர் எழுப்பியுள்ள கேள்வி!

கழகத்தை ஏசி மகிழலாம், அடக்கிஒடுக்க முனைந்திடலாம், மாசு கற்பிக்கலாம் — அதற்கான வல்லமை உண்டு முதலமைச்சருக்கு — ஆனல் நாடு முழுவதும் எதிர்க்கிறதே, நாட்டவர் அனைவரையுமா அடக்கி ஒடுக்கிடப் போகிருர்! எல்லோரையுமா இழிமொழி பேசி அழித்திடப் போகிருர்! கடலலையைக் கரம்காட்டி, நின்றிடு என்று கூறிய மன்னன் கதையை முதலமைச்சர் படித்திருப்பாரே! எப்போதெப்போதோ படித்த கதைகளெல்லாம் அவருக்கு இப்போது நினைவுக்கு வருகிறதே, கான்யூட் மன்னன் கதையும் கவனத்திற்கு வரத்தானே செய்யும்!

எதிர்ப்புக் குறிகளான கருப்புக் கொடிகளை, அவை தனிப்பட்டவர் வீடுகளிலே பறக்கவிடப்பட்ட போதும் அறுத்தெறிந்தனர், தீயிட்டனர். முடிந்தது! பொறுத்துக்கொண்டோம். ஆனால் எதிர்ப்புக் குறிகளை அகற்றிவிடுவதாலோ அழித்துவிடுவதாலோ, எதிர்ப்பு உணர்ச்சி அழிந்துபடுமா? அழித்துவிட முடியுமா? அறிவுத் தெளிவுள்ளவர்கள், குறிகளை அழிப்பதன் மூலம் உணர்ச்சியை அழித்திட இயலாது என்று கூறுகின்றனரே! உணர்ச்சி அழியாதது மட்டுமல்ல, ஒன்றுக்குப் பத்தாக ஓங்கி வளரும் என்றன்றோ வரலாறு காட்டுகிறது. முதலமைச்சர் இதனை அறியாரா? மறந்தாரா?

அகல் விளக்குக்கு ஆடிக்காற்று பகை! ஆனால் அதுவே பெருநெருப்புக்குத் துணை! வீட்டு விளக்கை அணைத்துவிடலாம்—இருள் விரும்பிகள்—ஆனால் காட்டுத் தீயை கரங்களால் தேய்த்து அணைத்திடப் போமோ! கழகத்தை அலைக்கழிக்க முடியும்—151—144—147 — பாதுகாப்புச் சட்டம் — பலப்பல உள — போலீசும் உண்டு — கண்ணீர்ப்புகைக் குண்டுகள் உண்டு — கல்லூரி விடுதிகளில் சிதறிக்கிடக்கின்றனவாம்—துப்பாக்கி உண்டு—மார்பைக் காட்டினான் மாணவ மாவீரன்–இறந்தான் இறவாப்புகழ் ஈட்டிக்கொண்டான்–நாடு முழுவதையுமா எதிர்த்து நிற்கப்போகிறார்! இயலாது!!

நமது வலிவினை ஒடுக்கக் கிளம்பி, முதலமைச்சர் காண்பது என்ன? ஒடுக்க முடியாத புதிய பலம் கொண்டு நாடு, இந்தி எதிர்ப்பு முகாமாகிவிட்டிருக்கும் நிலையினை! தன்வினை தன்னைச்சுடும் ஓட்டப்பம் வீட்டைச் சுடும் என்ற பட்டினத்தார் பாடல், இந்த நேரத்திலாவது முதலமைச்சரின் நினைவிற்கு வந்திருக்க வேண்டும்.

என்னென்ன நடந்துவிட்டது நாட்டிலே பல்வேறு இடங்களிலே. கேட்டிடும்போதே கண்ணீர் பொங்கிடும் விதமான நிகழ்ச்சிகள் அல்லவா! முனையின்கூர் மழுங்கிடத்தக்க அளவல்லவா, மாணவர்கள் மீது அடக்குமுறை ஈட்டி ஏவப்பட்டது.

மாணவர்கள் மீது பழிபோட்டு அவர்களின் நடவடிக்கைகளிலே உள்ள தூய்மையைக் கெடுத்திட முதலமைச்சர் முனைந்தார்! வெற்றி கண்டார்! ஓ! நிரம்ப, வெண்சாமரம் வீசி வெள்ளிக்காசு பெற்றிடுவோர் முதலமைச்சரின் 'வீரதீர பராக்கிரமத்தை'ப் பாராட்டினர் — ஆனால் நாடு? நாட்டு மக்களின் உள்ளத்தைப் படம்பிடித்துக் காட்டுவதுபோல இந்தியன் எக்ஸ்பிரஸ் எழுதிற்று.

**தொடக்கத்தில் மாணவர் ஆர்ப்பாட்டங்கள் அமைதியாகவே இருந்தன. விஷமக்காரர்கள் சிலர் இதில் ஈடுபட்டு கொதிப்பூட்டாமல் இருந்தாலும் எல்லாம் அமைதியாக நடந்திருக்கும். ஆனால் [illegible] அலுவலகத்தின் முன்னால் கத்திகம்புகளுடன் நின்றுகொண்டு காலிகள், மாணவர் ஊர்வலத்தைத் தாக்காதிருந்திருந்தால் இந்தக் கொடுமைகள் பொறிவிட்டிருக்கமாட்டா.**

வீண் எதிர்ப்பு, அமளி, உணர்ச்சிக் கொந்தளிப்பு ஆகியவற்றினை ஆதரிக்கக்கூடாது என்ற ஒழுங்கு முறையைத் தமக்குத்தாமே வகுத்துக்கொண்டு கடைபிடித்து வரும் இதழ்கள்யாவும் — ஆட்சியாளர்களிடம் வெண்பொற்காசுபெற வாழ்த்துப் பத்திரம் படித்துக் கொடுத்திடும் இதழ்கள் தவிர, மற்றவை — கழகம் மேற்கொண்ட துக்கநாள் திட்டத்தை எதிர்த்து காங்கிரஸ் அரசு மேற்கொண்ட செயலினையும், மாணவர்களின் கிளர்ச்சியை ஒடுக்க, அரசு போலீசை ஏவி அவிழ்த்துவிட்ட அடக்குமுறையினையும், வன்மையாகக் கண்டித்துள்ளன — கிளர்ச்சி நியாயமானதே என்று திறம்பட வாதாடுவதுடன் நின்றுவிடவில்லை; கிளர்ச்சி நீடிக்கும் என்று எச்சரித்துள்ளன; கிளர்ச்சியை அடக்குமுறையால் அழித்துவிட முடியாது என்று எச்சரித்துள்ளன; இந்தி எதிர்ப்புப் பிரச்சினையைத் தீர்த்திட, அரசியல் சட்டத்தைத் திருத்துவதுதான் நல்வழி, ஒரேவழி, அறவழி என்று அறிவுறுத்தியுள்ளன.

இந்தவிதமான ஒருமித்த கருத்து, இதற்கு முன்பு எழுந்த எந்தப் பிரச்சினைக்கும் நாட்டிலே கிடைத்ததில்லை. இந்தஒரு பிரச்சினைக்குத்தான் கட்சி கட்டுகளைக் கடந்ததோர் ஆதரவு திரண்டுவிட்டிருக்கிறது. நாட்டின் எதிர்காலமும், மக்களின் நல்வாழ்வும், நிர்வாகத்தின் தன்மையும், கல்வித்துறையின் வகையும், பாதிக்கப்படக்கூடிய, பொதுப்பிரச்சினை இந்தி எதிர்ப்புப் பிரச்சினை என்பது இன்று விளக்கமாகிவிட்டிருக்கிறது. மொழி ஆர்வம் சிலரையும், உரிமைவேட்கை சிலரையும், நிர்வாகத்துறை கெடலாகாதே என்ற பொறுப்புள்ள கவலை சிலரையும், அறிவுக்கண் கெட்டுவிடுமே என்ற அச்சம் சிலரையும், இவ்விதமாகப் பிரச்சினையின் ஒவ்வோர் விதமான முனைபற்றிய அக்கரைகொண்ட, குறிப்பிடத்தக்க அணிகளாக அமைந்தன-துவக்கத்தில், தமிழ்கெடும்-தமிழர் கெடுவர்-தன்மானம் கெடும் என்ற முழக்கம் ஒருபுறம், நிர்வாகம் கெடும், நிலைகெடும், நினைப்புகெடும் என்ற எச்சரிக்கை மற்றோர்புறம், ஒற்றுமை கெடும் ஓரவஞ்சனைமிகும் என்ற அச்சம் பிறிதோர்புறம், இவ்விதம் பல்வேறுவிதமான உணர்ச்சிகள்.

இவை ஒன்றுக்கொன்று மோதிக்கொண்டு அழிந்துவிடும்—மோதவிடுவோம் என்று முனைந்து பார்த்தனர் அமைச்சர்கள், அவர்கள் எதிர்பார்த்ததற்கு முற்றிலும் மாறாக, ஒன்றுக்கொன்று மாறுபட்டவை என்று கருதப்பட்டுவந்த, இத்தனை உணர்ச்சிகளும் இன்று இணைந்து இழைந்து ஓர் பெரும் எழுச்சியாகிவிட்டிருக்கிறது. இந்தப் புதுவடிவம் எத்தனை பெரிய எதேச்சாதிகாரியும் புறக்கணித்துவிடத்தக்கது அல்ல, இந்தப் புதுவடிவம், ஆட்சியினருக்குக் கைகட்டி வாய் பொத்திச் 'சேவகம்' செய்திடாது; கட்டளை பிறப்பிக்கும் ஏற்றம் பெற்றது இந்தப் புதுவடிவம்; இஃது மக்கள் அமைத்துள்ள எதிர்ப்பு அணி! மாச்சரியத்தால்

அமைக்கப்பட்ட அரசியல் கட்சி அணி அல்ல, எதிர் காலத்தை எண்ணி மக்கள் அமைத்துள்ள பேரணி—போரணி.

இந்தப் போரணி அமைத்திட வழி பிறந்தது, உன் விழியில் நீரும் உடலில்குருதியும், உள்ளத்தில் வேதனையும் பீறிட்டுக் கிளம்பியதன் காரணத்தால், ஆகவே தமிழ் மகனே! உன்னைத் தத்தளிக்கச் செய்திடும் கொடுமைகளை மூட்டிவிடும் இந்தத் தமிழ் நாட்டில் ஏன் பிறந்தாய் என்று கேட்டேன், அது தவறு; மிகப் பெருந்தவறு! நீ இந்த நாளில் இந்தத் தமிழகத்தில் பிறந்து இத்தனை இன்னல்களையும் ஏற்றுக்கொண்டதனால்தான், இந்தி எதிர்ப்பு என்பதற்கு, எந்த ஆட்சியினரும் தலைவணங்கித் தீரவேண்டிய பேருருஅமைந்து விட்டது.

நெடுங்காலமாக பூமிக்கடியில் அழுத்திவைக்கப் பட்டுக் கிடக்கும் கரித்துண்டு, பிறகோர் நாள் வைரம் ஆகிறதாம்! இன்று வைரம் ஒளிவிடுகிறது!!

தமிழ்மகனே! இன்னல்களை ஏற்றுக்கொண்டாய்—இவனை எவர் ஏறெடுத்துப் பார்த்திடப்போகிறார் என்று பேசிடக் கேட்டாய் — இன்றோ தமிழ் மொழியார்வம் கொண்டோர் மட்டுமல்ல, மக்களின் பொது நலனில் அக்கறைகொண்டோர் அனைவரும், ஜனநாயகப் பண்பாட்டிலே பற்றுவைத்துள்ளோர் அனைவரும், கல்வித் துறை பயிலும் கணக்கற்ற வீரர்கள் அனைவரும், அணிவகுத்து நிற்கின்றனர்.

அமைச்சர்கள், ஒருவருக்கொருவர் பேசிக்கொள்கின்றனர்; ஒருவர்பற்றி மற்றொருவர் பேசுகிறார்; இவர் இருந்திருந்தால் எப்படி இருக்கும், அவர் பேச்சைக் கேட்டால் எப்படி ஆகும் என்றெல்லாம் பேச்சு!

தீக்குளித்த செய்தி கேட்டுத் திடுக்கிட்டுப் போனார் லால்பகதூர். அமெரிக்க ஏடுகளிலும் ஐ. நா. மன்றத்திலும் இந்திப் பிரச்சினைபற்றி எடுத்துக் கூறிடும் நிலை பிறந்தது. இவைகளை எல்லாம்விட, இந்திப் பிரச்சினையில், காலக்குறி அறிந்து, பிடிவாதத்தை விட்டொழித்து அரசு நடந்துகொள்ள முன்வராவிட்டால் என்ன நடந்திடும் என்ற கருத்தையும் தினமணி தெரிவித்துவிட்டிருக்கிறது.

> "இப்போது பிரிவினை கோரும் கட்சி, தி. மு. க. அல்ல. இந்திக்காரர்கள் தாம் பிரிவினையைக் கோருகிறார்கள் என்ற நிலைமை ஏற்படும். இதைவிட பச்சையாக — அல்லது அப்பட்டமாக, வெட்ட வெளிச்சமாக நாம் சொல்லத் தயாரில்லை."

ஒரு கல்லில் இரு மாங்காய் என்பர்—அது துள்ளி விளையாடும் பிள்ளைப் பருவத்துப் பேச்சு. இன்று நடந்திருப்பது, என்ன என்று எண்ணிப் பார்த்தனையா! உன்மீது வீசப்பட்டது ஒரு கல்—அது, உனக்கல்ல, ஊர் மக்களுக்கெல்லாம், உடலில் அல்ல, உள்ளத்தில் தந்துவிட்டிருக்கிறது ஒரு தழும்பு! சிறுசொல் வீசினர் உன்மீது, இன்று இந்த ஆட்சியினரின் போக்கைக் கண்டிக்கப் பயன்படுத்தப்படாத சொல்லே இல்லை, என்றாகிவிட்டது. தமிழ் மகனே! நீ இங்கு பிறந்தது தான் முறை! இன்னல் ஏற்றதுதான் முறை! உன்னால் மட்டுமே முடிந்தது ஏற்றுக்கொள்ள அதனால் விளைந்தது, நாட்டு மக்கள் மனதிலே நல்லெண்ணம்.

உன்னைத் தாக்கினர்—ஆமாம்—கொடி கொளுத்தினர்—உண்மைதான்...ஆனால், உனக்காகப் பரிவு காட்டிடத் திரண்டு நிற்கும் அணிவகுப்பைப் பார்த்தனையா!! இதைக் கண்டிட, சிறிதளவு விலை கொடுத்தோம், என்று எண்ணும்போது மகிழ்ச்சி பொங்கிடுமன்றோ!

இதழுலகு, மாணவர் உலகு, வழக்கறிஞர் வட்டாரம், மருத்துவர்கள் வட்டாரம்—எங்கெங்கு இருந்து பிறந்துவிட்டிருக்கிறது, பரிவு, நல்லார்வம், உறுதி; எழுச்சி!

இந்தி எதிர்ப்பா! தூ! தூ!! அது பிசுபிசுத்துவிட்டது! என்றன்றோ பேசினார், முதலமைச்சர். இத்தனை மத மதப்பா ஆட்சியினரின் மனதில் என்றெண்ணி நாம்கூடக் கவலைப்பட்டோமே! பார்த்தனையா, பிசுபிசுத்துவிட்ட இந்தி எதிர்ப்பு இன்றுகொண்டுள்ள புத்துருவை—பேருருவை! மக்கள் கேளாக் காதினர் அல்லர்—அவர்கள் இரப்பை வளர்ந்த கண்ணினர் அல்ல—ஆட்சியிலுள்ள சிலர் அவ்விதம் உளர். மக்கள் செவியினில் நமது முறையீடு புகாமலில்லை. அவர்கள் நமது பணியினைக் காணாமலில்லை. நெஞ்சினிலே நமை அவர்கள் கொள்ளாமலில்லை. மக்கள், இதயம் படைத்தவர்கள். மக்களின் நல்வாழ்வுக்காக நாம் மேற்கொள்ளும் இன்னல் கண்டு அவர்கள் உள்ளத்தில் பரிவும் இரக்கமும் எழாமலில்லை.

இன்று மக்கள் பேசுகின்றனர்...மக்கள் பிரச்சினையாகி விட்டது, இந்தி எதிர்ப்பு.



9-2-65

தமிழ் மகனே! உன்னைத் தாக்கினர்—உனக்காகப் பரிந்து பேச, வழக்கறிஞர்களும் இதழாசிரியரும் மட்டுமல்ல—தமிழர் மட்டுமல்ல — ஆந்திரர் — கன்னடியர்—கேரளியர் இவரெல்லாம் பரிவு காட்டுகின்றனர். வங்கமும் வாஞ்சனை காட்டுகிறது. எங்கெங்கும் உள்ள நல்லோர் பரிவு காட்டுகின்றனர்—இந்தி ஆதிக்கம் ஆகாது என்று உறுதியுடன் கூறுகின்றனர்.

அமைச்சர் அறிவுரை கூறுகிறார், இன்னும்என்ன? அமைச்சர் விளக்கிவிட்டார், மேலால் ஏன் எதிர்ப்பு? அமைச்சர் உறுதி மொழி அளித்துவிட்டார், இன்னும் என்ன அச்சம்?—என்ற பேச்செல்லாம் முன்பு—காது புளித்துவிடும் அளவு.

இப்போது, அமைச்சர்களுக்கு அறிவுறுத்தும் படலம்!! அமைச்சர்களின் பேச்சிலே உள்ள முரண்பாடுகளை எடுத்துக் காட்டும் கட்டம்! அமைச்சர்கள் அளித்திடும் உறுதி மொழியில் 'உப்பில்லை சப்பில்லை; —உயிரில்லை பொருளில்லை' என்ற ஏளனப் பேச்சு! அரசியல் சட்டம் திருத்தப்பட்டாக வேண்டும் என்ற ஒருமித்த, உறுதி நிரம்பிய அறைகூவல்.

நாலைந்து நாட்கள்; நாடாள்பவர்கள் ஆடினர் வேட்டை—கிடைத்தது என்ன? நாடெங்கும் கண்டனம்; நல்லோரின் இடித்துரை!

சிலுவை, ஏசுவுக்கு என்று தான் எண்ணினர், ரோம் சாம்ராஜ்யாதிபதிகள்! கேளுங்கள் கிருத்துவ மார்க்கத்தவர் கூறுவதை; ஏசு எழுந்து வந்தார் இறந்துபட்டது—அழிந்துபட்டது ரோம் பேரரசு.

எதிர்ப்பும் அழிப்பும், வெட்டும் குத்தும், தீயும் தீயனவும் கழகத்துக்கு என்று தான் திட்டமிட்டுத் துவக்கினர்—இன்று வெட்டுண்டதும் வெந்தழலுக்கு இரையானதும், ஆட்சியாளர்களின் போக்கு, ஆணவம் இவையே!

இத்தனையும் பெற்றளித்த திருவளர் செல்வனே! நீ இற்றை நாளில் இத்தமிழகத்தில் பிறந்ததனாலன்றோ இவ்வளவும் கிடைத்தது. இறுதியில் வெற்றி சூட்டித் தந்திடப் போகிறாய்—உனக்கென்னடா தமிழ் மகனே! குறை!! நாடே திரண்டு நிற்கிறது, ஏன் பிறந்தாய் தமிழ் மகனே! என்று கேட்டேனே, அந்தத் தவறு உணர்ந்துவிட்டேன்—உன்னோடு நானும் இங்கு பிறந்தவன் என்பதனை எண்ணி எண்ணி மகிழ்ச்சி கொள்கிறேன், எழுச்சி பெறுகிறேன்.

அண்ணன்,

அண்ணாதுரை

## 'இந்து' 2—2—65

ஆட்சி மொழிப் பிரச்சினையில் தென்னக மக்களின் அச்சத்தையும் கவலையையும் ஆட்சியில் உள்ளவர்கள் சரியாகவே புரிந்து கொள்ளவில்லை என்பது கடந்த சில நாட்களில் நிகழ்ந்த துரதிஷ்டவசமான நிகழ்ச்சிகளினால் தெளிவாகிறது.

*

சட்டப் பகுதியைச் சாதகமாக்கிக் கொண்டு ஆங்கிலத்தை எவ்வளவு விரைவில் விரட்ட முடியுமோ விரட்டிவிட்டு, இந்தியை ஆட்சிமொழியாக்கச் செய்யும் முயற்சியும், அதனால் இந்தி பேசாதாரைவிட இந்திக்காரர்களுக்கு சாதகமாக இருக்கும்வகையில் ஆட்சியில்உள்ளவர்கள் தந்திரமான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுவதும் நம் அச்சத்தை உறுதி செய்வனவான உள்ளன.

*

'படிக்க விரும்பாதவர்கள் இந்தி படிக்க வேண்டாமே' என்று வாதிடுவது பிரச்சினையை சரியாக விளக்கியதாகாது. ஏனென்றால் ஆங்கிலத்துக்குச் சம அந்தஸ்து தரப்படாமல் இந்த இந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை அடக்கி சுடுவதுதான் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதாகும் என்று போலீசார் தங்களுக்குள்ளாகவே நம்பிச் செயல்பட்டதாகத் தெரிகிறது. தனியார் வீடுகளில் ஏற்றப்பட்ட கறுப்புக் கொடிகளைக்கூட அகற்றுவது தங்கள் கடமையின் ஒரு பகுதி என்று அவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள்.

*

## 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' 1—2—65

தொடக்கத்தில் மாணவர் ஆர்ப்பாட்டங்கள் அமைதியாகவே இருந்தன. விஷமக்காரர்கள் சிலர் இதில் ஈடுபட்டுக் கொதிப்பூட்டாமல் இருந்தாலும் எல்லாமே அமைதியாக நடந்திருக்கும். ஆனால் மதுரையில் மண்டலக் காங்கிரஸ் அலுவலகத்தின் முன்னால் கத்தி, கம்புகளுடன் நின்றுகொண்டு காலிகள் மாணவர் ஊர்வலத்தைத் தாக்காதிருந்திருந்தால் இந்தக் கொடுமைகள் பொறிவிட்டிருக்க மாட்டா. இந்த வகையில் செய்தித் தாள்களில் ஒருமித்த கருத்துக்களே வெளியாயின.

*

மதுரைச் சம்பவம் குடியரசு நாளில் நடந்ததன்று. அதற்கு முன்னாள் நடந்தது. குடியரசு நாளில் நடத்தப்படும் ஆர்ப்பாட்டங்களுக்குத்தான் மாநில முதலமைச்சர் ஆட்சேபம் தெரிவித்தார். முன்னாளோ, பின்னாளோ ஆர்ப்பாட்டம் செய்வதற்கு அவர் மறுப்பு தெரிவிக்கவில்லை என்பதைக் கவனிக்கவேண்டும்.

*

'நமக்குப் புரியாத மொழியில் சென்னை அரசுக்குக் கடிதங்கள் வருமானால் அவற்றைப் புறக்கணிப்போம்' என்று காங்கிரஸ் தலைவர் பேசுவது சிறுபிள்ளைத் தனமானது.

சின்ன காஞ்சிபுரம் 66, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.